கம்பனில்
அனுமனும் சிவனும்



செ.திவான்

கம்பனில்

அனுமனும் சிவனும்

வரலாற்றாசிரியர்

செ. திவான் எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,

ரெஹான் சுலைமான் பதிப்பகம்,
106-F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

ஆசிரியரின் 90–ஆவது நூல்

முதற் பதிப்பு	:	12.12.2012
கணினி வடிவமைப்பு	:	நான்சி கணினியகம், பாளையங்கோட்டை.
அச்சிட்டோர்	:	சிவசக்தி அச்சகம், சிவகாசி.
முகப்போவியம்	:	முருகன், காசி கிராபிக்ஸ், பாளையங்கோட்டை.
விலை	:	ரூபாய் ஐம்பது

Lives of great men all remind us

that we can make our lives sublime

புனிதர்களுடைய வாழ்க்கை வரலாறுகள்

எங்கள் வாழ்வை நாம் எவ்வாறு

புனிதமாக்கலாம் என்று எமக்கு நினைவூட்டுகின்றன.

காணிக்கை

கவிச்சக்கரவர்த்தி

கம்பனின் புகழ்பாடி

கன்னித்தமிழை

வளர்த்தவர்களுக்கும்

வளர்த்து வருபவர்களுக்கும்

வளர்த்திட இருப்பவர்களுக்கும் . . .

செ.திவான்

நூலாசிரியர் செ.திவான் எழுதிய,பதிப்பித்த நூல்கள்

1) விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள் (தொகுதி – 1)
சீதக்காதி அறக்கட்டளையின் முதல் பரிசு ரூ.10,000 பெற்ற நூல்)
2) நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப்
("உணர்வு") வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5,000 முதல் பரிசு பெற்ற நூல்)
3) ஆரியமாயை அகல . . .
("சங்கொலி" வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5,000 முதல் பரிசு பெற்ற நூல்)
4) திருகுர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்.
5) நபி பெருமானாரின் நாற்பது பொன் மொழிகள்.
6) தக்கலை பீர் முகம்மது (ரஹ்) ஞானப்பாடல்களும், சரிதையும்
7) இந்திய சுதந்திரப் போரில் நெல்லை மாவட்ட முஸ்லிம்கள்
8) வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்
9) குடை
10) சிந்தனைக்கு
11) வ.உ.சி.யின் துன்பத்தின் கற்பனை
12) வ.உ.சி.யும் பெரியாரும்
13) வ.உ.சி.யும் தொல்காப்பியரும்
14) வ.உ.சி. பாடல்கள்
15) வ.உ.சி.யின் அரசியல் பெருஞ்சொல்
16) தெற்கில் ஒலித்த தீன்குரல்
17) விடுதலைப் போரில் விஸ்வகர்மாக்கள்
18) பாரதியும் காங்கிரசும்
19) ஸ்டெர்லைட்டை விரட்டுவோம்
20) உண்மையின் சவுக்கடி
21) கூடங்குளம் அணு உலையை மூடு
22) குடைப்புரட்சி
23) ஆரியப் பாதையில் பசுவதை
24) வாகை சூடி வரும் வைகோ
25) கலைஞரை வென்ற வைகோ
26) வைகோவின் பொன்மொழிகள்
27) சேது சமுத்திரத் திட்ட வரலாற்று நாயகன் வைகோ
28) வ.உ.சி. புகழ் பாடிய முன்னோடிகள்
29) வ.உ.சி.யின் நூற்கோவை
30) வ.உ.சி.யும் பரலி சு.நெல்லையப்பரும்
31) ஆன்மீகச் சிந்தனை

32) வேதங்கள் விலக்கிடும் விக்கிரக வழிபாடு
33) செய்குத்தம்பி பாவலரின் ஷம்சுத்தாசீன் கோவை
34) கட்டபொம்மனின் கடைசி நாட்கள்
35) வி.ஓ.சி. கண்ட பாரதி
36) இறை நேசச் செல்வர் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி)
37) வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம்
38) இறைவனின் திருநாமங்கள்
39) இறுதித் திருநபியும் இயற்கையின் அற்புதங்களும்
40) அண்ணாவின் மறுபக்கம்
41) மாற்றார் மதித்திடும் மாநபி (ஸல்)
42) பெரிய புராணத்தில் வாழ்க்கை நெறி
43) விடுதலையின் நிறம் பச்சை
44) வரலாற்றுப் பாதையில் பசுவதை
45) கட்டபொம்மனும் கலெக்டர் ஜாக்சனும்
46) இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.
47) சதாவதானி செய்குத்தம்பி பாவலரின் நபிகள் நாயகமான்மிய மஞ்சரி
48) வ.உ.சி.யின் உயில்
49) ஆலிப்புலவர்
50) தியாக நெருப்பில் வைகோ
51) வ.உ.சி.யும் திருக்குறளும்
52) அணைய வேண்டிய அயோத் 'தீ'
53) வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்
54) வியத்தகு சாதனையாளர் வைகோ
55) மாநபி (ஸல்) காட்டிய மனித உரிமைகள்
56) வைகோ . . . வெற்றிப் பாதை . . . வீரச்சங்கொலி
57) செந்தமிழ் வளர்த்த சிங்கப்பூர் அ.நா.மொய்தீன்
58) விடுதலைப் போரில் வீரமிகு முஸ்லிம்கள் (தொகுதி – 2)
59) திராவிட இயக்கம் – வரலாற்றுக் குறிப்புகள்
60) வேலூர்ப் புரட்சியில் (1806) வீரமிகு முஸ்லிம்கள் (தொகுதி – 3)
61) இந்திய சுதந்திரப் பெரும் போரில் இஸ்லாமியர்கள் (தொகுதி–4)–1072 பக்கங்கள்.
62) சங்கொலி
63) பம்பரம்
64) சுயமரியாதை சூரர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி
65) இந்து – முஸ்லிம் ஒற்றுமை
66) புரட்சிக் கனலில் பொசுங்கும் துரோகம்
67) மாலிக்காபூர்
68) சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு

69) அறிஞர் அண்ணாவின் அமுத மொழிகள்
70) கழகத்தின் காவலன் கே.வி.கே. சாமி
71) இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.யின் சிவஞான போத உரை
72) வ.உ.சி.யின் சுயசரிதை
73) அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி
74) கே.வி.கே. சாமி கட்டுரைகள்
75) நாடோடி மன்னன்
76) விடுதலை வேள்வியில் விஸ்வநாததாஸ்
77) கச்சத்தீவு யாருக்குச் சொந்தம்?
78) பாரதி செல்லம்மாள் உயில்
79) தேவநேயப் பாவாணரின் கிறித்தவக் கீர்த்தனம்
80) தேவநேயப் பாவாணரின் துவாரகை மன்னன்
81) இந்திய சுதந்திரப் போரில் தமிழக விஸ்வகர்மாக்கள்
82) மகாகவி பாரதியாரின் இஸ்லாத்தின் மஹிமை
83) வாடகை வீட்டில் வாழ்ந்த வரலாற்று நாயகர் காமராஜர்
84) பரிசு பெறாத பாரதி பாடல்
85) உமறுப்புலவர் விருதும் உள்ளத்து உணர்வும்
86) அறிஞர் அண்ணா கர்மவீரர் காமராசர், தமிழர் தலைவர் வைகோ
87) வல்லிக்கண்ணன் கடிதங்கள்
88) இந்திய சுதந்திரப் போரில் வக்கம் அப்துல் காதர்
89) சுதந்திரச் சங்கநாதம் சுப்பிரமணிய சிவா சிறைவாசம்
90) கம்பனில் அனுமனும் சிவனும்
91) மனோன்மணியம் சுந்தரனார் ஒரு புதிய பார்வை (அச்சில்)

சங்கொலி, தினமணி, நம்நாடு, அறமுரசு, குர்ஆனின் குரல், மறைச்சுடர், உணர்வு, மக்கள் உரிமை, விடியல் வெள்ளி, சிந்தனைச்சரம், ஜமாத்துல் உலமா, ரஹ்மத், இஸ்லாமிய சகோதரத்துவ குரல், சமரசம், தினமலர், முரசொலி, தினகரன், தினத்தந்தி, தமிழ் முரசு மற்றும் பல இதழ்களில் ஆயிரக்கணக்கான கட்டுரைகள் . . .

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை
எழுதுவதற்காகவே வாழ்கிறேன்.

செ.திவான்
ரெஹான் சுலைமான் பதிப்பகம்,
106-F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

வள்ளல் வைகோ நூலகம்,
கல்வித்தந்தை
சுலைமான் இல்லம்,
12.12.2012

சொல்லின் செல்வன்

அனுமன்! ஆம். ஆஞ்சநேயன், சிறிய திருவடி, இராமதூதன் என்று போற்றப்படுபவன். பரமஞானி; குருசேத்திரப் பூமியில் அருச்சுனனின் தேர்க் கொடியில் இருந்து கொண்டு ''கீதோபதேசத்தை' நேரில் கேட்டவர்; பிரமச்சாரி; காமம் என்ற நினைப்பே வராதவன்; சகலகலா சம்பன்னன்; (நிறைவுடையோன்) சாதுர்யமாகப் பேச வல்லவன். ஒன்பது வியாகரணமும்* (இலக்கணமும்) தெரிந்த நய வியாகரண சேத்தா என்று இராமனால் புகழப்பட்ட கல்விமான். இராமாயணம் படிக்கின்ற இடங்களில் எல்லாம் அனுமன் அமர்ந்து கேட்கின்றான் என்பது ஹிந்துக்களின் நம்பிக்கை. இராம சேவையிலே நிறைகுணம் பெற்றவன். சிரஞ்சீவி. சுக்ரீவனின் நல்லமைச்சன். இராமனின் பரமபக்தனான அனுமனின் வாய்மொழியாகவே கம்பராமாயணத்தில் சிவபெருமான் குறித்து பதினைந்து இடங்களில் சைவ - வைணவ சமயக் கொள்கைகளுக்கு இணைப்பாக நின்று கம்பர் காட்டுகிறார்.

அஞ்சனை வயிற்றில் வந்தோன்

''மஞ்சு எனத்திரண்ட கோல மேனிய! மகளிர்க்கு எல்லாம்
அஞ்சு எனத் தகையஆகி, நளிர் இரும் பணிக்குத்தேம்பாக்
கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்ண! யான் காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றில் வந்தேன்; நாமமும் அனுமன் என்பேன்''**

---

* திநீலாம்பிகை, வடசொற்றமிழ் அகர வரிசை, சென்னை, 1952, ப. 286.

** கம்பராமாயணம், கிட் கிந்தா காண்டம், அனுமப்படலம் பாடல் எண் 3765 நூலில் வரும் பாடல்களில் சென்னைக் கம்பன் கழகம் தந்துள்ள எண்கள் குறிக்கப்பட்டுள்ளது.

பருத்த தோள்களையும், செந்தாமரை மலர் போன்ற சிவந்த கண்களையும் உடையோய்! வாயுவின் வேந்தனுக்கும் அஞ்சனா தேவிக்கும் பிறந்தவன் நான். என் பெயர் அனுமன். *

வாயுதேவன் அஞ்சனா தேவியைக் கண்ணுற்றான்; காதல் கொண்டான்; தன்னை மறந்தான்; இருவரும் இன்புற்றனர். விளைவு அனுமன் எனும் வீரன் பிறந்தான். மலைச்சாரலில் மாருதி மகிழ்ச்சியுடன் வளர்ந்து வந்தான். கானகத்தில் கிடைக்கும் காய், கனி, கிழங்குகளை உண்டு வளர்ந்தான். வல்லமையுடன் திகழ்ந்தான். வேகமாகத் திரிந்தான்.

மலைச் சிகரங்களில் தாவிக் குதித்தான். மரங்களை வேரோடு பிடுங்கி எறிந்தான். சூரியன் உதயமாகும் வேளை அதைக் கண்ணுற்று, 'சிவந்த பழம்' என அதை நினைத்தான். அதைக் கைப்பற்ற வானில், சூரியனை நோக்கிப் பறந்தான். உலகிற்குத் தீங்காகுமே என்று இந்திரன் விரைந்தான். தன் கையிலிருந்த வச்சிராயுதத்தால் அனுமனைத் தாக்கினான். அனுமனின் தாடை உடைந்தது. தாடை முறிவு பெற்றதால் அனுமான் என்ற பெயரினால் அழைக்கப் பெறுவானாக! என்று பிரம்மா கூறினார். **

"இவரது கன்னம் (அநு) முறியப் பெற்றதனால் அனுமன் என்று பெயர் பெற்றான்." ***

வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார்

"இந்திரனது வச்சிராயுதத்தினால் அடிக்கப்பட்டுச் சிதைந்த கன்னமுடையவன்; அனு-ஹனு. கவுள், கன்னம்: மாந்- வடமொழிப் பெயர் விகுதி என்பர் வை.மு.கோ." ****

---

* M.நாராயண வேலுப்பிள்ளை, ஆஞ்சநேயபுராணம், சென்னை, 1996, ப. 7.

** திருமதி பத்மஜா அனந்தராமன், ஸ்ரீ ஆஞ்சநேயர், திருநெல்வேலி, 1966, ப.8.

*** T.V. சிவசண்முகம், இராமாயணம் காவிய நாயகன் கலைக்களஞ்சியம், இலத்தேரி, 1990, ப. 28.

**** வை.மு.சடகோப ராமாநுசாரியார், சே.கிருஷ்ணமாசாரியர், வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார், ஸ்ரீகம்பராமாயணம், கிஷ்கிந்தாகாண்டம், சென்னை, 1922, ப. 49.

அனுமனின் பெயர்கள்

அனுமனுக்குத் திராவிடர்களால் வழங்கப்பெற்ற பெயர் ஆண் மந்தி.

. . . . and whose name was in the **Dravidian Speech** just the male monkey (in Tamil An-Manti)* *பின்னர் இது சமஸ்கிருத மொழியில் ஹநுமந்த் என்று பெயர் மாற்றம் பெற்றது.*

. . . . . and his original Dravidian name An-Manti, as in Tamil, was then Sanskritized in to Hanumant.**

இதுவே தமிழில் அனுமன் என வழங்கப்படுகின்றது.

எஸ்.வையாபுரிப்பிள்ளை

*அனுமான் அணுவாகவும், மஹான் ஆகவும் உருவெடுக்க வல்லவனாதலால், அப்பெயர் பெற்றான். 'அனுமஹான்' என்பதே அனுமான் எனத் திரிந்தது*** என்பர் எஸ்.வையாபுரிப்பிள்ளை.*

புராண வீரன்

*அனுமான் புராணவீரன்; பஞ்ச பூதங்களாலும் அழியாதவன் என்று அனுமனைப் 'புராண வீரன்' என்கிறது கலைக்களஞ்சியம்.*****

சுவாமி சித்பவானந்தா

*ஹனுமான் என்றால் பருத்த கன்னங்களை உடையவன். கன்னம் முறியப்பட்டவன் என்பார் சுவாமி சித்பவானந்தா.******

---

* S.K.Chatterji, Race-Movements and Prehistoric Culture, R.C.Majumdar, The Vedic Age, Bharatiya Vidyabhavan, Mumbai, 1996, p.166.

** மேலது., ப. 167.

*** எஸ். வையாபுரிப்பிள்ளை, கம்பன் காவியம், சென்னை, 1962, ப. 35.

***** கலைக்களஞ்சியம், தொகுதி–1, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1954, ப. 281.

****** சுவாமி சித்பவானந்தா, அறம் வளர்த்த நம்பி, ப. 19.

அனுமன் வானர வீரனாகக் கேசரியின் மனைவி அஞ்சனாதேவிக்கும், காற்றுக் கடவுளான வாயு பகவானுக்கும் புதல்வனாகத் தோன்றியவன். எனவே கேசரியும் தந்தை என்பதால் தந்தை வழிப் பெயராகக் **'கேசரி நந்தவர்த்தனன்'** என்றும் 'வாயு'விற்குப் பிறந்ததால் 'வாயுநந்தனன்', **'வாயுபுத்திரன்'** என்றும் அழைக்கப்படுகின்றான்.

மருத் – காற்று – மாருதி

'மருத்' என்றால் வடமொழியில் **'காற்று'** என்று பொருள். அதனால் **'மாருதி'** என்றும் அழைக்கப்படுகின்றான். தாய்வழிப் பெயர்களாக **'அஞ்சனை மைந்தன்'**, **'அஞ்சனா நந்தவர்த்தனன்'**, **'ஆஞ்சநேயன்'** என்ற பெயர்களைப் பெறுகின்றான். அனுமனின் தோற்றத்தைக் கொண்டு பல்வேறு பெயர்கள் அவனுக்கு வழங்கப்படுகின்றன. கடலைத் தாண்ட நின்ற நிலையில் நிற்கும் அனுமன் **'வீர ஆஞ்சநேயன்'** என்றும், ஐந்து முகங்களைக் கொண்ட காரணத்தினால் **'பஞ்சமுக அனுமன்'** என்றும், ஒரு கையில் கதையும் மற்றொரு கையில் சஞ்சீவி மலையையும் கொண்டிப்பதால் **'சஞ்சீவிராயன்'** என்றும், வால் அறுபட்ட நிலையில் இருக்கும் அனுமன், வால் அறுந்த ஆஞ்சநேயன் என்றும், யோக நிலையில் இருப்பதால் **'யோக ஆஞ்சநேயர்'** என்றும் சிவனது நெற்றிக்கண், இந்திரனது வஜ்ராயுதம், கேடயத்தினையும், யமனுடைய பாசம், சூலம் ஆகிய அனைத்தையும் பத்துக் கைகளில் பத்து ஆயுதங்களாகத் தாங்கிச் சிவன், விஷ்ணு, இந்திரன், யமன் என்ற ஐவர் உருவமும் ஒன்றாகி நிற்கும் அனுமன் **திரிநேத்ர சதுர்புஜ அனுமான்** என்றும் வழங்கப்படுகின்றான். அனுமனின் பண்புகளைக் கொண்டு இராமபக்தன் என்றழைக்கப் படுகின்றான்.

வானர வடிவமாக இருந்தாலும் உருவத்திலும் பண்பிலும் அறிவிலும் அவனிடத்துள்ள கம்பீர அழகே அவனுக்குச் **'சுந்தரன்'** என்னும் பெயர் பெற்றுத் தந்தது. அவனது செயல்களாலும் சில பெயர்களைப் பெறுகின்றான். சூரியனிடம் மாணாக்கனாக இருந்து கல்வி கற்றதனால் **'ஆதித்யசிஷ்யன்'** என்றும் திருமாலைத் தன்னுடைய

தோள்களின் மேல் சுமக்கும் பேற்றினைப் பெற்றதால், இராமனுக்கு வாகனமாய் இருந்த காரணத்தால் **‘சிறிய திருவடி’** என்றும் பெயர் பெற்று விளங்குகின்றான். இவை தவிர அனுமனுக்குத் துவாதச நாமங்களாக **‘அனுமான்’, ‘வாயுபுத்திரன்’, ‘ராமேஷ்டன்’, ‘பிங்காட்சன்’, அஞ்சனாகுமாரன், ‘மகாபிலிஷ்டன்’, ‘அர்ஜுனசகன்’, ‘அமிதா ராக்ரமன்’, ‘சமுத்திரத்தைத் தாண்டியவன்’, ‘சீதை சோகத்தை நாசம் செய்தவன்’, ‘இலட்சுமணனுக்குப் பிராணனை கொடுத்தவன்’, ‘இராவணன் கொழுப்பை அடக்கியவன்’** என்ற பன்னிரு நாமங்களும் வழங்கப்படுகின்றன.*

பல்வேறு மூலிகைகளால் வாசனை நிறைந்த சஞ்சீவியைத் தாங்கிப் பிறந்தால் **‘கந்தவாஹாத்மஜ’** எனவும் அனுமன் அழைக்கப்படுகின்றான். **‘வாத ஜாதன்’** என்பதற்குக் காற்றின் மைந்தன் என்றும், காற்றுக் கூட்டத்தினைத் தன்னகத்தே உடைய ஒருவன் என்னும் பொருள் கொள்ளப்படுகிறது.**

பிற மாநிலங்களில்

வானர வீரனாகப் பிறந்து, மனிதர்களின் நற்குணங்களையும் பெற்று, தமக்கென வாழாது பிறருக்கென வாழ்ந்துகாட்டி அன்பு நெறிகளையும், அறநெறிகளையும் போதித்த அனுமனைத் தமிழகத்தில் ஆஞ்சநேயர் என்றும்,

அனுமந்தய்யா - (கர்நாடகம்)

ஆஞ்சநேயலு, சஞ்சீவய்யா - (ஆந்திரம்)

மாருதி, மஹாவீர், சோனி, மாருதி பிகாரி, சோர் மாருதி - (மஹாராஷ்டிரம்)

---

* நஜன், ஆஞ்சநேயப் பிரபாவம், பிரதிபா பிரசுரம், சென்னை, 1979, ப. 24.

** ஸ்ரீ.வி.எஸ். கருணாகரன், மஞ்சு இராமாயணம், ஸ்ரீநடாதூர் அம்மாள் டிரஸ்டு, தஞ்சாவூர், 1983, ப. 10.

பஜ்ரங் பலி - (உத்திரப்பிரதேசம்) என்றும் அழைக்கப்படுகின்றான்.

'கந்தவாஹனன்', 'மலையமாருதன் சுந்தரன்', **'அர்ச்சுனனுக்குச் சிநேகிதன்'**, 'மிகுந்த பலசாலி' என்றெல்லாம் அனுமனைப் போற்றி மகிழ்வர்.*

சிலப்பதிகாரத்தில்

தமிழின் முதலிலக்கியமாகவும் முதன்மையான இலக்கியமாகவும் திகழும் சங்க இலக்கியத்தில் இராமாயணக் குறிப்புக்கள் காணப்படினும் அனுமன் பற்றிய குறிப்புக்கள் இல்லை. முதன் முதலில் சிலப்பதிகாரத்தில் தான் அனுமன் பேசப்படுகின்றான்.

"உரக்குரங்கு உயர்ந்த ஒண்சிலை உரவோன்"

(அழற்படுகாதை: 111)

என்று அருச்சுனனைக் குறிப்பிடும் இடத்தில் இளங்கோ குரங்கினைக் கொடியாக உடைய அருச்சுனன் என்று குறிப்பின்றார். இங்கு குரங்கு என்பது அனுமனையே குறிக்கும். அனுமனின் சிறப்புக்களுள் அவன் ஆற்றலும் ஒன்று. அது புலப்பட உரக்குரங்கு என்று அடிகள் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.**

சிலப்பதிகாரத்தில், நான்கு இடங்களில் இராமாயணத்தைப் பற்றிய குறிப்புக்கள் காணப்பட்டாலும் ஒரே ஒரு இடத்தில் அனுமன் சிலப்பதிகாரத்தில் பேசப்படுகிறான்.***

---

* மு.திரவியம், அருள்மிகு ஆஞ்சநேயர் கோவில்களும் வழிபாடும், சென்னை, 1994, பக். 35.

** ச.சிவகாமி, அனுமன் ஆய்வும் வழிபாடும், 1974, ப. 129.

*** மதுரைக்காண்டம், புறஞ்சேரி இறுத்த காதை, 64–65; ஊர்காண் காதை 46–49. ஆய்ச்சியர் குரவை படர்க்கைப் பரவல் முதல் பாடல், வஞ்சிக் காண்டம், நீர்ப்படைக் காதை 7–10.

பெரியாழ்வார்

நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில், முதல் ஆயிரத்தில் பெரியாழ்வார் திருமொழி, மூன்றாம் பத்தில், பத்தாந் திருமொழியாகிய **'நெறிந்த கருங்குழல்'** *எனும் பத்துப் பாசுரங்களில் கடைசி இரு பாசுரங்களில் பெரியாழ்வார் அனுமன் பெயரைக் குறிப்பிட்டுள்ளார்.*

"சீர்ஆரும் திறல் அனுமன்" என்கிறார்.

பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார்

*"வாநரர்கள் பலரிருக்கச் செய்தேயும் இவனே இக்காரியஞ் செய்ய வல்லான் என்று பெருமாள் திருவுள்ளம் பற்றி அடையாளங்களுஞ் சொல்லித் திருவாழியுங் கொடுத்துவிடும்படி ஜ்ஞாநாதி குணங்களால் பரிபூர்ணனாய், நினைத்தது முடிக்கவல்ல சக்திமானாயிருக்கிற திருவடி - சீர்மை பொருந்திய சக்தியுடையவனான சிறிய திருவடி" என்று பிரதிவாதி பயங்கரம் அண்ணங்காசாரியார் விளக்கம் தருகிறார்.** *

சே.கிருஷ்ணமாசாரியார்

இலங்கைக்குத் தூது சென்ற திருவடிபிராட்டியைக் கண்டு சக்கரவர்த்தித் திருமகன் கூறிய சில அடையாளங்களைக் கூறிக் கணியாழி கொடுத்துக் களிப்பித்தல் என்ற தலைப்பில் பெரியாழ்வார் குறிப்பிடும் பாசுரம் இது.

அதற்கு முந்தைய பாசுரமான 'திக்குநிறை' எனத் துவங்கும் முந்தைய பாசுரத்திலும் **'அனுமான் ஒக்கும் ஆல் அடையாளம்'**

---

* பெரியாழ்வார் அருளிச் செய்த திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியும், முதலாயிரத்தின் முதல் ஸம்புடம், இவை பெருமாள் கோவில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியரால் எல்லார் தமக்கு மின்பம் பயக்குமாறு எளிய நடையில் தெளிய எழுதப்பட்ட திவ்யார்த்த தீபிகை என்னும் உரையுடன், சென்னை மாடல் அச்சுக்கூடம், இரண்டாம் பதிப்பு. 1928, ப. 343.

என்று அனுமன் பெயரினை பெரியாழ்வார் குறிப்பிட்டுள்ளார்.*

தி.வீரராகவாசார்யன்

‘ஒக்குமாலடையாளம்’ என்றதற்கு நீ முன்பு சொன்ன அடையாளங்களும், திருமொழி மோதிரத்தில் அடையாளமும் ஒக்கும் என ஜீயருரை. அனுமான் இதுவரையில் ஐயப்பட்டிருந்த எனக்கு இப்போது நீ அனுமானே என உறுதி ஏற்பட்டது என்றபடி** என்று வீரராகவாச்ஸார்யன் விளக்கம் தருவார்.

வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார்

‘சீதாபிராட்டி தன் உயிரை மாய்க்குந் தருணத்திலே வந்து எதிர்நின்று அப்பிராட்டியின் உயிரைக் காப்பாற்றிப் பிராட்டியின் செய்தியை இராமபிரானிடத்துத் தெரிவித்து அவ்வகையால் அவனுயிரைந் தளிர்ப்பித்து இப்படி அவ்விருவரையுங் காத்ததனால், மிக்க புகழ் படைத்தவனும், கடல் கடத்தல் முதலிய செய்தற்கரிய தொழிலைச் செய்வதற்கேற்ற ஸாமர்த்தியமுடையமனும் ஆதலால் இங்ஙனம் கூறப்பட்டானுமாம்’ என்று அனுமனைப் புகழ்ந்து விளக்கம் தருகிறார். வைத்தமாநிதி முடும்பை கோபாலகிருஷ்ணமாச்சாரியார்.***

---

* திருவல்லிக்கேணி தமிழ்ப் பண்டிதர் சே.கிருஷ்ணமாசாரியார் பதிப்பித்த ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிர திவ்யப்பிரபந்தம், சென்னை ஸக்ஸஸ் அச்சுக்கூடப் பதிப்பு, ருதிரோத்காரி, ப. 69.

** உபயவேதாந்த க்ரந்தமாலை பெரியாழ்வார் திருமொழி ஸ்ரீ உத்தமூர் தி.வீரராகவாசார்யன் உரை, காஞ்சிபுரம் 1953, ப. 379.

*** பெரியாழ்வார் அருளிச் செய்த திருப்பல்லாண்டும், பெரியாழ்வார் திருமொழியும் (முதலாயிரத்தின் முற்பகுதி) இவை திருவல்லிக்கேணி வைத்தமாநிதி – முடும்பை கோபால கிருஷ்ணமாச்சாரியார் இயற்றிய உரையுடன் சென்னை இந்தியா ப்ரிண்டிங் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டன. விரோதிக்ருத் வருடம் தை மாதம், ப. 314.

ஆழ்வார்கள் அனுமனை சிறிய திருவடி என்றே போற்றுகின்றனர். அச்சிறிய திருவடியின் திருச்செயல்களை மகிழ்ந்து பாராட்டிப் பாடியுள்ளனர். அனுமன் அருச்சுனன் *கொடியில் இருப்பதைப் பெரியாழ்வாரும்* பாடியுள்ளார்.

'வெள்ளைப் புரவிக் குரங்கு வெல் கொடித்தேர்' என்பது *அவரது திருவாக்கு.* இலங்கையை எரித்த அனுமனின் புகழ் பாடிக் கோவர்த்தன மலை தன்னிடம் வாழ்கின்ற மந்திகளைத் தூங்க வைப்பதாகவும் பெரியாழ்வார் பாடியுள்ளார்.

"அடங்கச்சென் றிலங்கையை யீடழித்த
அனுமன் புகழ்பாடித் தங்குட்டன்களைக்,
குடங்கைக் கொண்டுமந்திகள்கண் வளர்த்தும்
கோவர்த் தனமென்னும் கொற்றக் குடையே"*

*வெள்ளைப் புரவிக்குரங்கு வெல் கொடித்தேர் என்று அருச்சுனன் கொடியில் அனுமன்*** வீற்றிருப்பதைப் பெரியாழ்வார் பாடியுள்ளார்.****

திருமங்கை ஆழ்வார்

பெரிய திருமொழி 10-இல் 2-வது 'இரக்கமின்றி', சக்கரவர்த்தித் திருமகன் விஷயம் எனும் தலைப்பில் திருமங்கை ஆழ்வார் பாசுரம்,

"ஓதமா கடலைக் கடந்தேறி
உயர்கொள் மாக்கடி கானவஇறுத்து

---

* நாலாயிர திவ்யப்பிரபந்தம், பாசுரம் (270), பெரியாழ்வார் திருமொழி 3, 5. அட்டுக்குவி கோவர்த்தனகிரியைக் குடைகொள் வண்ணம், பாசுரம் 7.

** தர்மரது கொடியில் இரு மிருகங்கள், பீமன் கொடியில் சிம்மம் நகுலன் கொடியில் சரபம், சகாதேவன் கொடியில் அன்னம் அபிமன்யூ கொடியில் சாரங்கப் பறவை, கடோத்கஜன் கொடியில் கழுகு, கண்ணன் கொடியில் கருடர், துரியோதன் கொடியில் சர்ப்பம், கிருபாச்சாரியார் கொடியில் எருது, அஸ்வத்தாமன் கொடியில் சிங்கவால், ஜெயத்ரன் கொடியில் கரடி, கர்ணன் கொடியில் யானைச் சங்கிலி (லெப்.கமாண்டர் கே.வி.சிங் எழுதிய 'நமது தேசியக் கொடி' நூலிலிருந்து)

*** ச.பானுமதி, தமிழ் இலக்கியங்களில் அனுமன், சென்னை, 1999, ப. 167.

காதல் மக்களும் சுற்றமும் கொன்று
கடி இலங்கைமலங்க எரித்து,
தூது வந்த குரங்குக்கே . . .''*

ஆற்றல் சான்ற தொல் பிறப்பில் அனுமனை வாழ்கவென்று பாடிக் குழமணி தூரம் (ஒரு வகைக் கூத்து) ஆட அரக்கர்களை அழைக்கின்றார். அதனால் அவர்களுக்குக் கூற்றுவர்களாக உள்ள இராமன், சுக்கிரீவன், அனுமன், அங்கதன், நளன் ஆகியோரின் சீற்றம் தணியும் என்கிறார் திருமங்கை ஆழ்வார்.

அனுமன், இராவணனுடைய பழைய வலியுடைய மதில் கொண்ட இலங்கையை எரித்துவிட்டு அன்புடன் இராமனிடம் வந்தான். அது போன்ற அன்புடன் இராமனின் இணையடிகளைப் பணிபவர்களை, என்பெலாம் உருக, நெஞ்சமெனும் அன்பினால் ஞானநீர் கொண்டு அடியவனாகிய நான் நீராட்டுவிப்பேன் என்று திருமங்கை ஆழ்வார் பாடுகிறார்.

''முன் பொலா இராவணன் – தன் முது மதின் இலங்கை வேவித்து
அன்பினால் அனுமன் வந்து, ஆங்கு, அடிஇணை பணிய நின்றார்க்கு
என்றபுஎலாம் உருகி உச்சிட்டு, என்னுடைய நெஞ்சம் என்னும்
அன்பினால் ஞானநீர் கொண்டு ஆட்டுவன் அடியனேனே''*

குலசேகர ஆழ்வார்

தனம் மருவு வைதேகி பிரியல் உற்று
தளர்வு எய்திச் சடாயுவை
வைகுந்தத்து ஏற்றி . . .
இலங்கை நகர்
அரக்கர் கோமான் சினம் அடங்க
மாருதியால் சுடுவித்தானைத்

---

* மயிலை மாதவதாஸன், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், சென்னை, 1962, ப. 414.

** திருமங்கையாழ்வார், திருக்குறுந்தாண்டகம் 15 (நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் பாசுரம் 2046)

தில்லை நகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்
இனிது அமர்ந்த அம்மானை இராமன் தன்னை
ஏத்துவார் இணையடியே ஏத்தினேனே*

ஸீதை இருக்குமிடத்தைத் தேடித் தெரிந்து கொள்ளும் பொருட்டு, இராமதூதனாய்ச் சென்ற ஹநுமான் கடல் கடந்து இலங்கைபுக்கு அசோக வனத்திற் சீதையைக் கண்டு பேசிய பின்பு இராவணனுக்குத் தன் வரவை தெரியச் செய்து அவனைத் தான் நேரிற் கண்டு பேசக் கருதி அசோகவனத்தை அழித்ததுமன்றி, அதற்காக வந்தெதிர்த்த அரக்கர் அனைவரையும் அழித்திட்ட காரணத்தால் இராவண குமாரனான இந்திரஜித்து வந்து எதிர்த்து ப்ரஹ்மாஸ்த்தரத்தாற் கட்டிக் கொண்டு சென்ற பொழுது அக் குரங்கைக் கொல்லக் கருதிய இராவணனை விபிஷணன் 'தூதரைக் கொல்லலாகாது' என்று நீதி கூறி மறுக்க, பின்பு இராவணன் ஏவலால் அரக்கர்கள் அனுமானது வாலில் கிழி சுற்றி நெய்யாலும் எண்ணெயாலும் நனைத்து நெருப்பு மூட்ட அது கொண்டு அவ்வனுமான் இலங்கை முழுவதிலும் ஆங்காங்குத் தீப்பற்ற வைத்து அந்நகரை எதிர்த்திட்டனன். உத்தம தூதனான இவன் செய்த இச்செயல் தலைவனான இராமனது திருவுள்ளத்துக்குப் பாங்காயிருந்ததனால் 'மாருதியாற் சுடுவித்தான்' என்றார். மாருதி - வாயுவினது குமாரன்; வடமொழித் தத்தித் தாந்த நாமம்.**

செயற்கரிய செயலைச் செய்த போதும் அனுமன் ஆணவம் அடையாது ஆண்டவனின் அடியானாக வந்தான். அது போல் அடியார்கள் தங்கள் செயல்களின் வெற்றிகளினால் ஆணவம் கொள்ளாது அதனை ஆண்டவர்

---

* நாலாயிர திவ்யப்பிரபந்தம், குலசேகர ஆழ்வார் தில்லைச் சித்ரகூடம் இராமசரிதம், பாசுரம் 6, (746).

** மயர் வறமதி நலமருளப் பெற்ற ஸ்ரீ குலசேகராழ்வார் அருளிச் செய்த பெருமாள் திருமொழி, பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்காரசார்யர் இயற்றிய திவ்யார்த்த தீபிகை யென்னும் உரையுடன், M.R. கோவிந்தசாமி நாயுடுவால் மதறாஸ் மாடல் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது. இரண்டாம் பதிப்பு, 1930, பக்.139–140.

செயலாகக் கொண்டு இறைவனைப் பணிய வேண்டும். அதுவே உண்மையான பக்தி என்று அனுமன் மூலமாக ஆழ்வார்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

அனுமனைச் சிறப்பித்துப் பாடிய ஆழ்வார்கள் மூவரும் அனுமனது பக்திக்கும், ஆற்றலுக்கும் சிறப்பிடம் கொடுத்திருப்பதைக் காண முடிகிறது.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

தேவாரப் பதிகத்தில் அனுமன்

"நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்
பேருடைச் சுக்கிரீவன் அநுமான்தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தஎம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே"*

தஞ்சை, திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி போன்ற ஊர்களிலிருந்து செல்லும் முத்துப்பேட்டைப் பேருந்தில் சென்று இறங்கி கோயிலூர் செல்லலாம். கோயிலூர்தான் திருஉசாத்தானம்.

இராமபிரான், இலக்குவன், சுக்ரீவன், அனுமன், ஜாம்பவான் முதலியோர் வழிபட்டுப் போற்றிய தலம் இது.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் மூன்றாம் திருமுறையில் **'நீரிடைத் துயின்றவன்'** எனத் துவங்கும் பதிகத்தில் சொல்கிறார்.

'திருமால் தன் அவதாரங்களில் இராமபிரானாகப் பிறந்த நிலையில் அவரின் இளவலான இலட்சுமணனும் இவரின் திருக்கூட்டத்தார்களான சாம்பவான், சுக்ரீவன், அநுமன் ஆகியோரும் தொழுது வணங்கக்கரிய நஞ்சினைக் காத்தருள் செய்த எம் பெருமைக்குரிய சிவனார் வாழுமிடம் திருவுசாத்தானமேயாகும்'**

---

* தேவாரம், மூன்றாம் திருமுறை, திருஞானசம்பந்தர், 33, திருவுசாத்தானம் பதிகம் 1.

** புலவர்.பி.ரா.நடராசன், திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம், 1, 2, 3 திருமுறைகள் வரலாற்று முறையில் மூலமும் உரையும், இரண்டாம் பகுதி, சென்னை, 2004, ப. 602.

நீரிடைத் துயின்றவன் - இராமன். பாற்கடலில் துயிலும் திருமாலிடம் வானவர், அரக்கர் துயரை முறையிட இராமனாகப் பிறந்தமை குறித்து 'இராமனை நீரிடைத் துயின்றவன்' என்றார். அநுமன் தொழச் சேடர்வாழ் திருவுசாத்தானம் என்க. சேடர், வாழ் - வாழ்த்தல் வாழ்த்துவது என்னும் பொருள்.*

திருவண்ணாமலையின் தவப்புதல்வர் அருணகிரிநாதரின் திருப்புகழில் அனுமன்

'திருவருணை' என்பது திருவண்ணாமலையே. மாணிக்கவாசகர் திருவெம்பாவையைப் பாடிய தலமான இதற்கு சோணகிரி, சோணாசலம் என்ற பெயர்களும் உண்டு. குன்று தோறாடல் பகுதியில் வரும் 'திருவருணை'யில் 'முருகு செறிகுழல் சொருகிய விரகிகள்' எனத் துவங்கும் அருணகிரிநாதர் பாடல் இதோ:

"சுருதி யிருபது கரமுடியொருபது
கனக மவுலி கொள் புரிசை செய் பழையது
கடிய வியனகர் புகவரு கனபதி** கனல்மூழ்கிக்
கவச அநுமனொ டெழுபது கவிவிழ
அணையி லலையெறி யெதிரமர் பொருதிடு
களரி*** தனிலொரு கணைவிடு மடலரி மருகோளே"****

---

* திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரப் பதிகங்கள், மூன்றாவது திருமுறை, தருமபுர ஆதீனம் வெளியீடு, 1955, பண்டித அ.கந்தசாமிப்பிள்ளை நுண்பொருட் குறிப்புரை, பக். 144.

** கனபதி – இலங்கை.

*** களரி – யுத்தகளம்.

**** அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழ் முதற் புத்தகம் சந்தக் குழிப்பும், அரும்பதவுரையும் அடங்கிய திருத்தமான புதுப்பதிப்பு., மதுரை, வித்யா பானுப் பத்திராபதிர் மு.ரா.கந்தசாமிக் கவிராயவர்களால் பரிசோதிக்கப்பற்றது. மதுரை புத்தக வியாகாரம் இ.மா. கோபால கிருஷ்ணக் கோனரால் வெளியிடப் பெற்றது. மதுரை எக்ஸெல்ஸியர் பிரஸ், 1921, பக். 340 – 341.

இப்பாடலில் அனுமன் இலங்கையை எரித்த செயலைப் பாடியுள்ளார் அருணகிரிநாதர்.

'ஆராய்ந்து இருபது கைகளும் பத்துத் தலைகளும் பொன்முடி அணிந்த தலையையுடைய இராவணன் ஆண்ட மதில்கள் கொண்டதும் பழமை வாய்ந்ததும், காவல் கொண்டதுமான அற்புதமான அயலார் புகுவதற்கு அரிய நகரம் இலங்கை. அந்நகரம் எரியில் முழுக, கவசம் போன்ற அநுமானுடன் எழுபது வெள்ளம் குரங்குகள். மலைகளைக் கொணர்ந்து இட்ட அணையில் கடலை அடக்கி, அதனைக் கடந்து போய் எதிர்த்துப் போரிட்ட போர்க்களத்தில் ஓர் அம்பினை விட்ட பெருவீரனான திருமாலின் மருமகனே** என்று முருகனைப் பாடுகிறார் அருணகிரிநாதர்.*

வயலூர் ஆனைக்கா

'அறந்தழைத்த அனுமானோடு மாகடல்
வரம் படைத்ததின் மேலேறி ராவண
னரண் குலைத்தெதிர் போராடு நாரணன் மைந்தனாக
அநங்கன் மைத்துனவேனே!'

தருமஞ் செழித்து வர, அநுமானுடன் பெரிய கடலின் எல்லையை அணை போட்டு அடைத்து, அதன் மேறி

---

* தாமரை, வெள்ளம், ஆம்பல் பேரெண்கள், ச.வே.சுப்பிரமணியன், தொல்காப்பியம், தெளிவுரை, சென்னை, 2003, ப. 155.

A Large number

தமிழ் லெக்ஸிகன், தொகுதி – 6, சென்னை, 1934, பக். 3791.

கோடி 100000010 கொண்டது, அதிலிருந்து 100000010 கொண்டது மகாகோடி. அவ்வாறே கூட்டிக் கொண்டு செல்ல அதன் பின் வருவது சங்கம், மகாசங்கம், விந்தம், சமுத்திரம், மகாசமுத்திரம், வெள்ளம் கணக்கதிகாரம் பாடல் 89, புலவர் பா.கண்ணையன், தமிழ்ச் சுவடிகளில் எண்கணிதம், மயிலம், 2008, ப. 18.

** ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், பேராசிரியர் அ.மாணிக்கம் உரை, தொகுதி 2, சென்னை, 2000, ப. 388.

அக்கரையைச் சேர்ந்து, இராவணன் அரண் குலைத்து, எதிர்த்து யுத்தத்தைச் செய்த நாராயணனின் மைந்தனாக, மன்மதனுக்கு மைத்துனனான முருகவேளே!* என்று அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

'வெற்றி பெற்ற அனுமனைப் புகழ்ந்தான்' என்றும் அனுமன் குறித்து திருப்புகழில் அருணகிரிநாதர் மூன்றாவதாகவும் பாடியுள்ளார்.

மகாபாரதத்தில் அனுமன்

வியாசபாரதத்தில், வன பருவத்தில், பதினெட்டாவது பருவமாக ராமோ யாக்யான பருவம் ராமர் வரலாற்றுச் சுருக்கம் உள்ளது. அதில் சுக்ரீவனின் அமைச்சனான அனுமன் இலங்கை நகர் சென்ற சீதையைக் கண்டு திரும்பினான். விவரத்தை இராமனிடம் தெரிவித்தான் என்று அனுமனைப் பற்றிய குறிப்பு வருகிறது.* மகாபாரதத்தில், பீமனும் அனுமனும் சந்திக்கும் காட்சி சிறப்பாக அமைந்துள்ளன.

வனபர்வம்

பஞ்ச பாண்டவர்களின் வனவாசத்தின் போது ஒரு நாள்; இனிய நறுமணம் உள்ளதும் ஆயிரம் இதழ்களுடன் கூடியதும், அழகும் மென்மையும் உடையதுமாகிய சௌகந்திகம்*** என்ற மலர் காற்றில் வந்து அங்கு வீழ்ந்தது. அதனைக் கிருஷ்ணை**** எடுத்து அதன் மணத்திலும் அழகிலும் உள்ளம் உவந்தாள். அதைக் கொண்டு போய் பீமனிடம் காட்டினாள்.

---

* அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழ் மூலமும், திரிசிபுரம் வித்துவான் அமிர்தம். சுந்தரநாதம்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட மெய்ஞ்ஞான விருத்தியுரையும் அ.மஹாதேவ யோகி அவர்களால் பார்வையிடப் பெற்றது B. இரத்தின நாயகர் ஸன்ஸ், சென்னை, 1927, ப. 258.

** வ.ஜோதி, வியாச பாரதம், சென்னை, 1998, பக். 866 – 867.

*** சௌகந்திகம் – ஒரு வகைத் தாமரை மலர்.

**** கிருஷ்ணை – பாஞ்சாலி, திரௌபதி.

பெருமானே! இதை நான் தங்கள் தமையனாருக்குத் தருவேன். இது போன்ற பல மலர்கள் எனக்கு வேண்டும். என் மீது உமக்கு அன்பிருக்குமானால் கொண்டு வந்து கொடுப்பீராக என்றாள். அம்மலர் குபேரனுடைய நகரில் உள்ளது என்று அங்குள்ள ஒருவர் கூறப் பீமன் கேட்டான். சிறிதும் சிந்தித்தானில்லை. பெரிய கதையையும், வில்லையும் எடுத்துக் கொண்டு அரச சிங்கம் போவது போல் வட திசையை நோக்கிப் புறப்பட்டுச் சென்றான். அவன் செல்லும் வழியில் அவனுடைய வேகத்தைக் கண்டு அஞ்சிய விலங்குகள் ஓடி ஒளிந்தன.

பீமனுடைய கைகள் அசைவதாலும் கால்கள் அசைவதாலும் எழுந்த காற்று அங்குள்ள மரங்களை ஒடித்து வேருடன் வீழ்த்தின. அந்தக் காடும் மலையும் அதிர்ந்தன. கருடனுடைய வேகமும், இராம பாண வேகமும் போல் நெடுந்தூரம் சென்றான்.

அநுமன் சந்திப்பு

அகு கதலிவனம் எதிர்ப்பட்டது. நரசிங்கம் போல் அதில் நுழைந்து, அந்த வாழைத் தோட்டத்தை ஒடித்தும் துகைத்தும் சிங்கநாதஞ் செய்தான். அங்குள்ள தாமரைக் குளத்தில் இறங்கி நீந்தி விளையாடினான்.

கதலிவனத்தில் 'ராமராம' என்று தவஞ் செய்து கொண்டிருந்த அநுமந்தர் யோக நித்திரை கலைந்து பார்த்தார். தன் தம்பி என்று உணர்ந்து அவனுக்கு அருள் புரிய வேண்டும் என்று கருதினார்.

"எம்பிரான் தனக்கொழிய வேறியாவர்க்குந் தெரியாச்
செம்பொன் மாமணிக் குண்டலம் இருபுறந் திகழ
விம்ப மால்வரை மீதொரு மேருவே யொக்கும்
அம்பொன் மால்வரை யிருந்தென இருந்தனன் அநுமான்"*

பீமன் செல்லுகின்ற வழியில் வாலையும் காலையும் நீட்டிக் கொண்டு வழி மறைத்து மாருதி தூங்குபவரைப் போல் அமர்ந்திருந்தார். அவர் முன் சென்று அண்டங்கள் வெடி படச் சிங்கநாதஞ் செய்தான் பீமன்.

'மானுடனே! இங்கு தேவரும் தானவரும் வர அஞ்சுவார்கள். மானுடனாகிய நீ அச்சமின்றி வந்தனை. நானோ கிழவன். நோயாளி. உறங்கிக் கொண்டிருந்தேன். நீ வீணே இங்குள்ள விலங்குகளை ஏன் கொல்லுகின்றனை? கருணையிருக்க வேண்டாமா? நீ யார்? எதற்காக வந்தாய்? இங்கு வந்தவர்கள் திரும்பிப் போக மாட்டார்களே? இதற்கு மேல் இம்மலையில் ஏற முடியாது. இதோ இங்குள்ள பழங்களைச் சாப்பிட்டுவிட்டுச் சுகமாகத் திரும்பு' என்றனர் அநுமார்.

"அண்டர் தானவர் அரக்கரும் அணுகுறா வனத்தில்
எண்டி சாமுகம் எங்கணும் இரிந்திட ஆர்த்து
மண்டி மேல்வரும் மானுடன் ஆரடா என்றான்
சண்ட வாயுவின் தனையனை மற்றவன் தமையன்"**

---

* வில்லி பாரதம், ஆரணிய பருவம், புட்பயாத்திரைச் சுருக்கம், பாடல் 23, இரண்டாம் புத்தகம், கலாநிலையம் கே.ராஜகோபாலாச்சாரியார், சென்னை, 1985, ப. 190.

அநுமான் – இதற்குக் கன்னத்தில் வேறுபாடு உடையவன் என்பது பொருள். ஹநு – கன்னம் மாநீ – வடமொழிப் பெயர் விகுதி. வை.மு.கோபாலக்ருஷ்ணமாசார்யார், மகாபாரதம் ஆரணிய பருவம் உரை, 1939, ப. 238.

** முற்கூறிய வில்லிபாரதம், ஆரணிய பருவம், புட்ப யாத்திரைச் சுருக்கம், பாடல் 25.

'பீமன் இதனைக் கேட்டுச் சிரித்தான். ஏ கிழக் குரங்கே! நீ யார்? என் பெருமையை நீ அறிய மாட்டாய். நான் பாண்டுவின் மரபில் வந்தவன். வாயு குமாரன். தண்டதரன். வாநரமே! வாலை மடக்கு. எனக்கு வழிவிடு' என்று அதட்டினான்.

அநுமான், 'அற்ப மனிதனே! என்னே நின் செருக்கு? தோள் வலியின் மமதை, நீ என்னை மதியாமல் பேசுகிறாய். நீ உண்மையில் வீரனானால் இந்த வாலைக் கடந்து போ' என்றார்.

"துன்னும் வெஞ்சிலை வலிகொலோ தோளிணை வலியோ
என்னை நீபுக லாரடா என்பதிங் கெவனோ
உன்னை நீயறியா நெறி யுணர்விலா மனிதா
மன்னும் வால்தனைக் கடந்துபோ வல்லையேல் என்றான்"*

பீமன், 'மதியில்லாத குரங்கே! உனக்கு மரணம் நெருங்கி விட்டது போலும். சிறு குரங்குடன் வாது செய்வது தகாது என்று எண்ணுகின்றேன். வாலைப் பிடித்துச் சுழற்றி எறிந்தால் ஏழு கடல்களுக்கும் அப்பால் போய் விழுவாய். தமையன் ஆஞ்சனேயருடைய வாலைக் கடக்க முடியாது. அவர் நூறு யோசனைக் கடலைக் கடந்தவர். அவர் சிறந்த புகழ் பெற்றவர். வணங்கத்தக்கவர். எல்லார் உள்ளத்திலும் ஈசன் இருக்கின்றான். ஆதலால் உன்னை நான் அவமதிக்கக் கூடாது. வழி விடு' என்று அநுமானுடைய மகிமைகளையும் இராமரது சிறப்பையும் கூறினான்.

"உரங்கொள் வீமனம் மாருதி உரைத்தசொல் கேளா
வரங்கொள் வார்சிலை யிராகவன் மாப்பெருந் தூதன்
தரங்க வாரிதி தாவுமென் தம்முன் வாலன்றிக்
குரங்கின் வாலிது கடப்பதிங் கரியதோ கூறாய்"

---

* மேலது, பாடல் 27.

'அப்பா! மானுடனே, நான் வலிமையற்றவன். கிழவன். நகரும் ஆற்றல் இல்லாதவன். ஆதலால் இந்த வாலைச் சிறிது நகர்த்தி வைத்துவிட்டுப் போவாய்' என்று மெல்ல வானராதிபர் கூறினார்.

பீமன் சீற்றம் அடைந்து அவமதிப்புடன் ஒரு கரத்தால் வாலைப் பிடித்து இழுத்தான். மாட்டாமையால் இரு கரங்களாலும் பிடித்து இழுத்தான். அசைக்க முடியவில்லை. அவனுடைய இரு விழிகளும் பிதுங்கின. உடம்பு வேர்த்தது. வலிமை குன்றியது. வானர வீரரைப் பார்த்து அடங்கிய குரலில், 'நீர் யார்? நாராயணரா? உருத்திர மூர்த்தியா? உம்மை நான் வணங்கிக் கேட்கின்றேன். சொல்லும்' என்றான்.

"அந்த வார்சிலை யிராமனுக் கடிமையாய் என்றும்
சிந்தை யாலவன் திருப்பதஞ் சிந்தைசெய் பவனும்
உந்தையாகிய வாயுவுக் குற்பவித் தவனும்
இந்த வாழ்வுடை யனுமனே என்றனன் இகலோன்"*

'நான் தான் அநுமான்' என்று அவர் கூறக் கேட்ட பீமன் நடுங்கினான். ஆனந்தக் கண்ணீர் வடித்தான். துள்ளினான். தொழுதான். அழுதான்.

தம்பியை அநுமான் எடுத்துத் தடந்தோளில் தழுவி, 'என் அன்புள்ள தம்பீ! உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்' என்றார்.

'அண்ணா! தாங்கள் கடல் கடக்கும்போது எடுத்த விசுவரூப தரிசனத்தை எனக்குக் காட்டியருள வேண்டும்' என்றான் பீமசேனன்.

ஹனுமான் கூறினார். அப்படிப்பட்ட என் உருவத்தை இந்த யுகத்தில் யாராலும் காண முடியாது. நான்கு யுகங்களிலும் காலம் மாறுகிறது. காலத்திற்கேற்ப மனிதர்களின் சக்தியும் மாறுகிறது. நதி, மரம், மலை, சகல ஜீவராசிகள்

---

* மேலது, பாடல் 36.

எல்லாமே அந்தந்த காலத்திற்கேற்ப உருவத்திலும், சக்தியிலும் மாறுதல்களை அடைகின்றன.

‘கிருத யுகத்தில் அழுகை, கர்வம், சதி, சண்டை, பொறாமை முதலியவை அறவே கிடையாது. நினைத்த பொழுது காரியம் கை கூடுகிற காலம் அது.’

‘அடுத்து வந்த த்ரேதாயுகத்தில் யாகம் முதலிய கர்மாக்கள் அதிகமாக நடைபெறலாயின. தவமும், தானமும் அப்போது முக்கியமாக இருந்தது. கிருத யுகத்தில் ப்ரம்மத்தில் எல்லோரும் ஐக்கியமாக நின்றது போய், த்ரேதா யுகத்தில் தவம் செய்தே பிரம்மத்தை அடைய முடியும் என்ற நிலை ஏற்பட்டது.’

‘அடுத்ததாக இப்போது நடக்கிற த்வாபரயுகம் வேதத்தைப் பரிபூர்ணமாக அறியும் சக்தி பலருக்கு இல்லாமல் போனதால், வேதமே நான்காகப் பிரிக்கப்பட்டது. வேதம் அனைத்தும் எல்லோருக்கும் தெரியும் என்பது போய், அதில் ஒரு பகுதி ஒரு சிலருக்குத் தெரியும் என்ற காலம் வந்தது. அறிவு சக்தி மனிதனுக்குக் குறைந்தது. அதனால் சத்தியத்திலிருந்து அவன் நழுவத் தொடங்கினான். பிரம்மத்தை அறிவதற்காக முயற்சி என்பது போய், இவ்வுலக வாழ்வில் இன்பத்தை அனுபவிப்பதற்காகவும், மறுமையில் சொர்க்கத்தை அடைய விரும்பியும் இப்படிப் பலன்களை விரும்பி மனிதர்கள் யாகங்களைச் செய்யத் தொடங்கி விட்டார்கள்.’

‘இந்த யுகம் முடிந்து வரப்போகிற அடுத்த யுகம் கலியுகம். அதில் தர்மம், யாகம், ஆசாரம் எல்லாமே அற்றுப் போகும் பெருத்த மழை, மழையின்மை ஆகியவற்றால் மக்கள் பீடிக்கப்படுவார்கள். வியாதி, சோம்பல், மனிதர்களுக்குக் கோபம், மனோ வியாதிகள், பசியினால் உண்டாகிற கலகங்கள் என்பவை மிகுதியாகும்.’

‘த்ரேதா யுகத்தில் நான் எடுத்த உருவத்தை, த்வாபர யுகத்தின் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிற இந்தச் சமயத்தில் உன்னாலும் கூட பார்க்க முடியாது. இருந்தாலும் நீ

விரும்புவதால், ஓரளவிற்கு என் உருவத்தைப் பெரிதாக்கிக் காட்டுகிறேன்.'

இப்படிக் கூறிய ஹனுமான் பெரிய சரீரத்தை எடுத்தார். மலை போல் உயர்ந்து நின்றார். பீமன் அந்தக் காட்சியைத் தாங்க முடியாமல், கண்களை மூடிக் கொண்டான். அப்போது ஹனுமான், 'இவ்வளவு மட்டுமே இப்போது காண முடியும். இதற்கு மேல் காண விரும்பாதே!' என்று கூறினார். பீமன் வணங்கி நின்றான்.*

அநுமனின் அறிவுரை

அப்போது ஹனுமான் அவனுக்கு அறிவுரை கூறினார். 'உன் வலிமையே பெரிது என்று நினைத்து, எந்தக் காரியத்திலும் ஈடுபடாதே! கடமையைச் செய்வோம் என்று நினைத்து, ஒவ்வொரு காரியத்தையும் செய். தெய்வங்கள் இடத்தில் பக்தி வை. தெய்வத்தின் அருளினால்தான் காரியம் சித்தியாகிறது என்பதை உணர்ந்து கொள். க்ஷத்திரியனாகிய உனக்குப் பிறரைப் பாதுகாப்பதே தொழிலாகும். தீயோரை அடக்கியும், நல்லோரைக் காத்தும், பாரபட்சம் இல்லாமல் நீதியைச் செலுத்தியும், க்ஷத்ரியர்கள் மேன்மையான உலகங்களை அடைவார்கள். அதுவே உனது தர்மம் என்று உணர்ந்து அதன்படி நடப்பாயாக!'**

அது கண்டு வீமன் அகமகிழ்ந்து வணங்கிக் கைகுவித்து நின்றான்.***

ராஜாஜி

'வியாசர் விருந்து' என்ற தலைப்பிலும், பின்னர் மகாபாரதம் என்ற தலைப்பிலும் ராஜாஜியின் மகாபாரதம்

---

* சோ, மஹாபாரதம் பேசுகிறது, முதல் பாகம், அல்லயன்ஸ், சென்னை, 2004, பக். 275 – 276.

** மேலது, ப. 277.

*** கம்பநாடர் ஆசிரியர் வித்வான், மோ.வே.கோவிந்தராஜ ஐயங்கார், ஸ்ரீ வில்லிபாரத வசனம், சென்னை, 1968, ப. 298.

வெளிவந்துள்ளது. அதில் 'பீமனும் அனுமானும்' என்ற தலைப்பில் ராஜாஜி பீமன் அநுமன் சந்திப்பை எழுதியுள்ளார்.*

அநுமான் பழையபடியே சுருங்கிய வடிவுடன் காட்சியளித்தார். பீமன் அவருடைய திருவடிமேல் வீழ்ந்தான். தம்பியைத் தழுவிக் கொண்டார். தழுவியவுடன் அவனுடைய ஆற்றல் மிகுதியாயிற்று.

'தம்பீ! உனக்கு நான் பூரணமாக அருள் புரிகின்றேன். உனக்குத் தீங்கு செய்த துரியோதனாதியரை இப்போதே இருந்த இடந் தெரியாத வண்ணம் அழித்துவிடட்டுமா? என் வாலினால் இங்கு கட்டிக்கொண்டு வரட்டுமா? நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டார்.

பீமசேனன், 'எம்பெருமானே! அடியேன் ஒருவனே அந்த மூடர்களைத் தங்கள் ஆசியால் அடித்து நொறுக்கி விடுவேன். இனி நடக்க இருக்கும் பாரதப் போரில் விஜயன் தேரின் கொடியில் தேவரீர் இருந்து உதவி செய்ய வேண்டும்'** என்றார்.

"நெடிய கானகம் நீங்கியாம் நெறியில் நேரலரைக்
கடிய வெஞ்செருப்புரி பெருங் குருதி வெங்களத்தில்
அடிகள் ஆங்கெழுந் தருளிவந் தருச்சுனன் தடந்தேர்க்
கொடியின் மீதுநின் றுவந்துகூத் தாடுதிர் என்றான்."***

இதன் பிறகு அவரிடம் ஆசி பெற்று பீமன் தனது பயணத்தைத் தொடர்ந்தான். அங்கே ஓரிடத்தில் சௌகந்திக ஓடை என்ற நீர்த்தேக்கத்தில், அவன் தேடி வந்த மலர்கள் குவிந்திருந்தன. அதைக் காத்துக் கொண்டிருந்தவர்களை பீமன் தாக்கினான். அவர்கள் குபேரனிடம் சென்று முறையிட்டார்கள். நடந்ததை அறிந்த குபேரன், பீமன்

---

* ராஜாஜி, மகாபாரதம், சென்னை, 1973, பக். 157 – 163.

** கிருபானந்தவாரியார், ஸ்ரீ மகாபாரதம், சென்னை, 1976, பக். 153 – 157.

*** வில்லிபுத்தூரார் இயற்றிய மகாபாரதம், ஆரணிய பருவம் உரையுடன், வை.மு. கோபால கிருஷ்ணமாசார்யர், ஆர்.ஜி.அச்சுக்கூடம், 1939, ப. 251.

விரும்பிய மலர்களைப் பறித்துச் செல்ல அனுமதி அளித்தான். பிறகு பீமனின் மகன் கடோத்கஜன் உதவியால், தர்மபுத்திரரும் மற்ற சகோதரர்களும் அங்கே வந்து சேர்ந்தார்கள். அங்கே ஓய்வெடுத்தப் பிறகு தௌமியர் சொல் கேட்டு, அவர்கள் தங்களுடைய ஆஸ்ரமத்திற்குத் திரும்பி வந்தனர். மகாபாரதம் தொடர்கிறது.

இராமன் சீதை இருவராலும் சிரஞ்சீவித் தன்மை பெற்றவன் அனுமன். அதன் பலனாகத் திருமாலின் அடுத்த அவதாரமான கிருஷ்ணாவதாரத்திலும் வாழ்ந்து தன் தம்பி பீமனுக்கு அருள் புரிகின்றான். பாண்டவர்கள் பக்கமிருந்து கௌரவர்களை அழிக்க உதவுகின்றான். கிருஷ்ணன் அருச்சுனனுக்கு கீதையைப் போதித்த போது அவன் தேரின் மேல் இருந்து கேட்கும் அரிய வாய்ப்பினையும் அடைகின்றான். இவையே மகாபாரதத்தால் நாம் அறிய வருவன.*

இராமாயணத்தில் அனுமன்

இராமாயணங்களில் அனுமன், ஏன்? பொதுவாக அனைத்து வானரங்களுமே ஏன் குரங்காகப் படைக்கப்பட வேண்டும் என்பதற்கு இரு விடைகள் நமக்குக் கிடைக்கின்றன. ஒன்று இராவணன் நந்தியால், நீ வானரங்களால் அழியக் கடவாய் என்று சாபம் கொண்டது. இதனை வான்மீகி உத்தரகாண்டத்து உரைக்கின்றார். கம்பன் சாபம் பெற்ற வரலாற்றினை விரித்துரைக்காமல் சுட்டி மட்டுமே செல்லுகிறான்.

இதோ கம்பன் கவிகள் ...

“மேல் உயர் கயிலையை எடுத்த மேலைநாள்
நாலு தோள் நந்திதான் நவின்ற சாபத்தால்
கூல வான் குரங்கினால் குறுகும், கோள், அது
வாலிபால் கண்டனம் – வரம்பு இல் ஆற்றலாய்”**

---

* ச.சிவகாமி, அனுமன் ஆய்வும் வழிபாடும், நாகர்கோவில், 1974, ப. 135.

** கம்பராமாயணம், யுத்தகாண்டம், இராவணன் மந்திரப்படலம், 80, சென்னைக் கம்பன் கழகம், பாடல் எண் 6150.

"நந்தி சாபத்தின் நமை அடும், குரங்கு, எனின் நம்பால்
வந்த சாபங்கள் எனைப்பல, அவை செய்த வலிஎன்?"*

குரங்கு போன்ற முகத்தை உடையவன் என்று இராவணன் பரிகசித்ததால் சினம் கொண்ட நந்தி தேவன் குரங்குகளால் உனக்கு அழிவு நேரும் எனச் சபித்தார்.

ஒட்டக் கூத்தர்

இதோ ஒட்டக்கூத்தரின் உத்தரகாண்டம் . . .

இராவணன் பகைவர் மார்பினைக் குடைந்து செல்லுகின்ற கொடிய அம்பு போன்ற சொற்கள் பலவற்றையும் சொல்லி உயர்ந்த குணத்தினனாகிய சிவபிரானது தொண்டனாகிய நந்தியின் முகத்தை இகழ்ந்து சொல்ல, அந்த நந்தி கோபமுடையவனாய், 'சிறிதும் இரக்கமில்லாதவனாய்க் குரங்கு முகம் என்று என்னை இகழ்ந்து சொன்ன உனது இலங்கை மாநகரில் குரங்குகள் புகுந்து நின் குலத்துளோரை மிகுதியாக்க கொன்றிடுக' என்று சாபச் சொல்லைச் சொன்னான்.

"உரம் குடையும் வெஞ்சரம் எனும் சொல்
பலவும் சொலி உயர்ந்த குணனாம்
அரன் தனது நந்தி முகம்தனை
இகழ்ந்திட, அவன் குபிதனாய்
இரங்கலை குரங்குமுகம் என்று எனை
இகழ்ந்தஉன் இலங்கை நகரில்
குரங்குகள் புகுந்து நனி கொன்றிடுக நின்குலனை"**

என்று உரை செய்தான்.

---

* மேலது, பாடல் 6176.

** இராமாயணம், ஒட்டக்கூத்தர் இயற்றிய உத்தரகாண்டம் முதற் பகுதி, வித்துவான் செ.வேங்கடராமச் செட்டியார் உரை – அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1977, வரையெடுத்த படலம், பாடல் எண் 320, ப. 441.

துளசிதாசர்

துளசிதாசர் இவ்விருவரினும் வேறுபட்டு, இராவணன், கும்பகர்ணன், வீடணன் ஆகிய மூவரும் கடுந்தவமியற்றிப் பிரம்மதேவனிடம் வரம் பெற்றனர்; இராவணன் மானிடர்களையும், குரங்குகளையும் தவிரப் பிறர் எவராலும் தான் கொல்லப்படாதிருக்க வரம் பெற்றான் என்றமைக்கின்றார். இச்சாபம் காரணமாகவே வானவர்கள் வானர்களாகப் பிறக்கின்றனர்.

மற்றொன்று வழக்குக் கதையாகும். நாரதர் இராமனிடம் இராவணனை அழிப்பதற்காகச் சக்தி வழிபாடு மேற்கொள்ள வேண்டினார். இராமனும் அதற்கிணங்கி வழிபடத் தேவி தோன்றி, நீ உன் செயலைத் தொடங்கலாம். உனக்குத் தேவர்களின் தன்மை வாய்ந்த என் சக்தியோடு கூடின வானரங்கள் உதவியாக இருக்கும்* என்று உரைத்து மறைகின்றாள். அதன்படி வானவர்கள் வானரர்களாகத் தோன்றினர் என்பது அக்கதை.

ச.சிவகாமி

அனுமன் ஆய்வும் வழிபடும் நூலில் ச.சிவகாமி தரும் செய்திகள் இதோ . . .

வான்மீகி இராமாயணத்தில் அனுமனின் வரலாறு மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. கம்பன் அதனை அவ்வாறு விளக்கி உரையாது ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றான். இம்மாறுபாடு ஏன் என்ற வினா எழுவது இயல்பே. கம்பன் இராமாயணம் படைக்கும் முன்பே தமிழ் மக்கள் அனைவருமே அறிந்த ஒன்றாக இராமாயணக்கதை இருந்தது, இராமன் வரலாறுரைக்கும் கதாகாலட்சேபங்கள் பல அன்றே நடைபெற்றிருக்கின்றன. ஆகவே கம்பன் நிகழ்ச்சிகளைச் சுட்டிச் செல்வதுடன் விட்டு விடுகிறான் எனலாம்.

---

* சீ.சு.ராகவன், நவராத்திரி ப. 17.

அனுமன் பாத்திரப் படைப்பினைப் பொதுவான நிலையில் ஆராயும் போது அவன் தன்மையில் எந்த ஒரு முரண்பாட்டையோ அன்றி வளர்ச்சியையோ கம்பர் காட்டவில்லை. அனுமனின் அறிமுகத்திலேயே அவன் தன்னிகரற்றவன் என்பதனை நாம் அறிகின்றோம். இராம இலக்குவர்களை எதிர்நோக்கி உரையாடும் துணிவு அவனிடம் மட்டுமே பொருந்தியிருந்தது. உள்ளங்கை நெல்லிக்கனி. அறிவு, ஆண்மை, பணிவு, பிறர்க்குதவும் உள்ள பண்பு இவற்றுடன் அனைத்துக் கலைகளிலும் வல்லவன் என்பதனையும் உணர்கின்றோம். இறுதிவரை அவனிடம் இப்பண்புகள் பொருந்தி நின்று ஒளிவிடக் காண்கின்றோம். தான் இராம தூதனாக உயர்ந்து பலரால் பாராட்டப் பெறும் நிலையிலும் தன் பெருங்குணங்களை விட்டகலாத தகைசால் பெருந்தகையாகவே அவன் காட்சி அளிக்கின்றான்.

உண்மை பக்தன் எவ்வாறிருக்க வேண்டும் என்பதனையும் கம்பன் அனுமன் படைப்பின் மூலம் புலப்படுத்துகின்றான். ஆண்டவனிடம் செலுத்தும் இடையறாத தூய அன்பு எல்லா ஆற்றல்களையும் நல்கும்; அடக்கம் அமரருள் உய்க்கும்; பிறர் நலம் பேணிப் பிறர் பொருட்டு வாழ்பவன் உலகோரால் போற்றப்படுவான்; நீடு வாழ்வான் என்ற அதன் பலன்களையும் வெளிப்படுத்துகின்றான். அனுமனிடம் காணப்படும் இனிய உயர் பண்புகளான தற்புகழ்ச்சியின்மை, பணிவு, புகழில் மயங்காமை இவை மானிடர்க்கு அவன் உணர்த்தும் படிப்பினைகளாம். அனுமன் புகழின் அடிப்படையே இவற்றில் தான் அடங்கிக் கிடக்கின்றது. உண்மை பக்தி ஒருவனுக்கு இவற்றை இயல்பாகவே நல்குகின்றது.

அனுமன் அளவிடற்கரிய ஆற்றல்களைப் பெற்றிருந்தும், ஏன் தன் தலைவன் சுக்கிரீவனை வாலியின் சீற்றத்தினின்றும் காக்க இயலவில்லை? சொல்லின் செல்வனாக இலங்குமவன் சுக்கிரீவனின் பிழையின்மையை ஏன் தெளிவுபட வாலியிடம் உரைத்திருக்கக் கூடாது? அல்லது அளவிடற்கரிய ஆற்றல் அடைந்திருக்கும் அவன் ஏன் தானே வாலியை வென்று

சுக்கிரீவனுக்கு அரசினை அளித்திருக்கக் கூடாது? அதன் பொருட்டு ஏன் இராம இலக்குவர் நட்பை நாட வேண்டும் என்பன போன்ற பல வினாக்கள் மனதுள் எழுகின்றன. இவற்றிற்குக் கம்பன் எவ்வித பதிலினையும் நேரிடையாகவோ மறைமுகமாகவோ கூறவில்லை. வான்மீகி உத்தரகாண்டத்தில் இவ்வினாக்களுக்கு வேண்டிய பதில் உரைக்கின்றார்.

இந்திரனின் வச்சிராயுதத்தால் தாக்குண்டதால் அஞ்சனை புதல்வன் தேவர்களிடம் பல வரங்கள் பெறுகின்றான். இவ்வரங்களால் செருக்குற்று வனத்தில் உள்ள முனிவர்களுக்கு இடர் பல இயற்றவே, எந்த வரங்களின் வலியால் நீ இப்படி அனைவரையும் வதை செய்கின்றாயோ அந்த வலியினை வெகுகாலம் வரையில் நீ உணராதிருக்கக் கடவது. பிறர் உன் கீர்த்தியை ஸ்தோத்திரம் செய்தால் அது உன் நினைவிற்கு வரும் என்று சபிக்கின்றனர். இச்சாபம் காரணமாக, தன் வலி அறியாது வாலி சுக்கிரீவனைப் பலவாறு துன்புறுத்தியும் மாருதி பார்த்துக் கொண்டிருக்கின்றான். சிம்மம் யானையால் மறிக்கப்பட்டு அடங்கியிருத்தல் போன்று வாலிக்கு அஞ்சி அமைதியாயிருக்கின்றான் என்பதே வான்மீகி உரைக்கும் பதில். இதனை உத்தரகாண்டம் 36-ஆவது சருக்கத்தில் காணலாம்.*

திருமாலின் வாமன அவதாரம்

அனுமனின் பேருருவத்தினைக் கம்பன் திருமாலின் வாமன அவதாரத்திற்கே பெரும்பாலும் ஒப்பிடுகிறான். அனுமனின் புகழ் இராமனின் புகழுக்குச் சமமாகவும் பேசப்பட்டுள்ளது. இது இராமனின் செங்கைத் தனுவாக விளங்கிய அனுமன் மட்டுமே பெற்ற தனிச்சிறப்பு.

அயனுடனும் ஒப்பிட்டு அனுமனைக் கம்பன் காட்டுகிறான். விபீடணன் தனதமையன், அரக்கர்கோன் இராவணனைப் பிரிந்து அறத்தின் நாயகன் இராமனிடம் அடைக்கலம் புகுகின்றான். அப்பொழுது சீதையிடத்துத்

---

* ச.சிவகாமி, அனுமன் ஆய்வும் வழிபாடும், ப. 8.

தூதுரைக்க வந்த கொற்றக்குவவுத் தோள் குரக்குச்சீயம் இலங்கையில் ஆற்றிய வீரச்செயல்களை நவில்கின்றான். அது கேட்டு அகம் மிக மகிழும் இராமன் தன் மகிழ்வை அனுமனுக்கு அடுத்த ஊழியில் பிரமன் பதவியை, படைப்புத் தொழிலை வழங்குவதன் மூலம் வெளிப்படுத்துகின்றான்.

அனுமன் சிவனுக்கு ஒப்பாக

கம்பன் அனுமனைப் பல இடங்களில் சிவனுக்கு ஒப்ப வைத்து உரைக்கின்றான். பெரும்பான்மை அனுமனின் ஆற்றலை உணர்த்தும் இடங்களிலே சிவன் உவமையாக்கப்பட்டுள்ளான்.

சுந்தரகாண்டம் – ஊர் தேடு படலம்

இலங்காதேவி அனுமனுடன் பொருதலைச் சொல்ல வந்த கம்பன்,

"வஞ்சங்கொண்டான்; வானரம் அல்லன், வருகாலன்
துஞ்சும், கண்டால் என்னை, இவன் சூழ்திரை ஆழி,
நஞ்சம் கொண்ட கண்ணுதலைப் போல நகுகின்றான்
நெஞ்சம் கண்டே கல்என நின்றே, நினைகின்றான்"*

என்பால் போர்க்கு வரும் யமன் என்னைப் பார்ப்பானேயானால், இறப்பான். அப்படியிருக்க இந்த அற்பன், அலைகள் சூழ்ந்த கடலில் தோன்றிய விஷத்தை உணவாகக் கொண்ட சிவபெருமானைப் போல சிரிக்கின்றான். இவன் குரங்கு அல்லன் என்று ஆராய்ந்து மலைபோல் நின்றாள் இலங்காதேவி. இங்கு அனுமனை சிவபிரானே என்று கருதியதாக கம்பர் காட்டுகிறார்.

பொழில் இறுத்த படலம்

அசோக வனத்தை அழித்து நின்ற அனுமன் நிலையைச் சொன்ன கம்பன்,

---

* சுந்தரகாண்டம், பாடல் 4920.

"தாழ் இரும்பொழில்கள் எல்லாம் துடைத்து, ஒரு தமியன் நின்றான்
ஏழினொடு ஏழுநாடு அளந்தவன் எனலும் ஆனான்
ஆழியின் நடுவண் நின்றஅரு வரைக்கு அரசும் ஒத்தான்
ஊழியின் இறுதிக் காலத்து உருத்திரமூர்த்தி ஒத்தான்"*

தழைத்த பெரும் சோலை முழுவதையும் அழித்து தன்னந்தனியனான் நின்ற அனுமன், பதினான்கு உலகங்களையும் தனது இரண்டு திருவடிகளாலும் அளந்து கொண்ட திரு விக்கிரம மூர்த்தி என்று சொல்லத்தக்கவனாகவும் இருந்தான். அதுவன்றிப் பாற்கடலின் நடுவே மத்தாக நின்ற அரிய சிறந்த மந்தர மலையைப் போலவும் இருந்தான். மேலும், கற்பாந்த காலத்தின் உலகத்தை எல்லாம் அழித்திட்டு நிற்கும் உருத்திரமூர்த்தியைப் போலவும் இருந்தான்.

சுந்தரகாண்டம்

பஞ்ச சேனாதிபதிகள் வதைப்படலம்

"முழுமுதல், கண்ணுதல், முருகன்தாதை, கைம்
மழு எனப்பொலிந்து ஒளிர்வயிர வான்தனி
குழுவினின், பொலங்கழல் அரக்கர் ஈண்டிய
குழுவினை, களம்படக் கொன்று நீக்கினான்."*

*மும்மூர்த்திகளில் சேர்ந்தவனாகிய கண்ணை நெற்றியிலே கொண்ட முருகக் கடவுளின் தந்தையாகிய சிவபிரானது கையில் ஏந்திய மழுவாயுதம் போல, மிக்கு விளங்குகின்ற உறுதியான சிறந்த ஒப்பற்ற இரும்புத் தூணினால், அழகிய வீரக்கழல் அணிந்த அரக்கருடைய நெருங்கிய கூட்டத்தைப் போர்க்களத்தில் இறந்து விழுமாறு கொன்று தொலைத்தான் அனுமன்.*** இங்கு அனுமனை சிவனோடு ஒப்பிடுகிறான் கம்பன்.*

---

* சுந்தரகாண்டம், பொழில் இறுத்தபடலம், பாடல் 46 (5474)

** சுந்தரகாண்டம், பஞ்சசேனாதிபதிகள் வதைப்படலம் பாடல் 46 (5646)

சுந்தரகாண்டம் – பாசப்படலம்

"ஈண்டு இவை நிகழ்வுழி, இரவி தேர்எனத்
தூண்டுறு தேரின்மேல் தோன்றும் தோன்றலை
மூண்டு முப்புரம்சுட முடுகும் ஈசனின்
ஆண் தகைவனை கழல் அனுமன் நோக்கினான்"*

இந்திரசித்தை நோக்கிய அனுமன் சிந்தனையாகக் கூற வந்த கம்பர், இவ்விடத்தில் இச்செயல்கள் நடக்கும் போது, சூரியனும் அவனுடைய தேரும் போல செலுத்தப்பட்ட தேரின் மீது விளங்கும் இராவணன் புதல்வனான இந்திரசித்தை சீற்றம் மேற்கொண்டு திரிபுரங்களை எரித்தற்கு விரைந்து செல்லும் சிவபெருமானைப் போன்ற ஆண்மைக் குணம் மிக்க பூண்ட வீரக்கழலை உடைய அனுமன் பார்த்தான். அனுமனுக்கு சிவபிரான் உவமை. அனுமன் சிவபிரான் அம்சமாக அவதரித்தவன் என்பதைக் குறிக்க வந்தது.*

அதிகாயன்

இராவணன் மக்கள் மூவர் அக்ககுமாரன், அதிகாயன், இந்திரசித்தன்.

பெருந் தோற்றம் உள்ள உடல் படைத்தவன் என்ற பொருள் கொண்டவன் அதிகாயன். அவனது இறப்பைப் பற்றி கூறும் பாடல் யுத்தகாண்டத்தில் 17-வதாக வரும் அதிகாயன் வதைப்படலம். கம்பன் கவி இதோ . . .

"வாலால் வரவளைக்கும், நெடுமலைப் பாம்பு என வளையா
மேல் ஆளொடு பிசையும், முழுமலை மேல்செலவிலக்கும்
ஆலாலம் உண்டவனே என, அகல்வாயின் கிட்டு அதுக்கும்
தோல் ஆயிரம் இமைப்போதினின் அரிஏறு எனத்
தொலைக்கும்"**

---

* அ.ச.ஞானசம்பந்தன், கம்பராமாயணம், சுந்தரகாண்டம், கம்பன் அறநிலை, கோவை, 2004, பாசப்படலம் பாடல் 49 (5765), ப. 684.

** கம்பராமாயணப் பாடல் 7887.

*அதற்கு மேல் அநுமன், வாலினால், நீண்ட மலைப்பாம்பு போல யானைகளை வளைப்பான். வளைத்து அதன் மேல் உள்ள வீரர்களோடு அழிக்கும் சில யானைகளை பெரிய மலை மீது மோதி உயிர்விடச் செய்வான். ஆலகால நஞ்சினை உண்ட சிவபெருமான் போல சிலவற்றை அகன்ற வாயில் இட்டு மெல்லுவான். ஆண் சிங்கம் போல யானைகள் ஆயிரத்தை இமைப் பொழுதின் அளவுக்குள் அழிப்பான். அனுமன் சிவபிரானின் அம்சமானவன்.** *

இவ்வாறு மும்மூர்த்திகளும் தொடர்புடைய ஒரு பாத்திரமாக அனுமன் படைக்கப்பட்டிருந்தாலும், அனுமனின் ஆற்றலைப் புலப்படுத்தும், இடங்களிலேயே அனுமனை சிவனுக்கு உவமையாகக் கம்பன் காட்டுகிறான்.

அனுமனும் சிவனும்

கம்பராமாயணத்தில் காப்புப் பாடலிலும் (மிகைப்பாடல்) பாலகாண்டத்தில் (திருஅவதாரப் படலத்திலும் 27-வது பாடல்) (கவி 206), கிட்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் ஆகிய காண்டங்களில் அனுமனைப் பற்றி 802 இடங்களில் கம்பன் பயிலுமிடங்கள் வருகின்றது என்பர் ச.சிவகாமி.

அனுமன் என 137 இடங்களிலும் அனுமான் என்று 6 இடங்களில் கம்பன் குறிப்பிடுவதாக எஸ்.வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகின்றார். **

கம்பனில் சிவன்

'கம்பனும் சிவனும்' என்ற நூலை 1966-இல் தமிழ்க்கடல், சிவமணி, சிவம் பெருக்கும் சீலர், ராய. சொ. அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

---

* கம்பராமாயணம், இராமாவதாரம், யுத்தகாண்டம் II, கம்பன் அறநிலை, 2004, கோவை – 37, முதன்மைப் பதிப்பாசிரியர் அ.ச.ஞானசம்பந்தன், ப. 146.

** ச.சிவகாமியின் முற்கூறிய நூல், பக். 183 – 208.

தமிழ்க்கடல் ராய.சொ.

காரைக்குடி அழகப்பா கல்லூரி தமிழ் ஆராய்ச்சித் துறை இயக்குநராகப் பணியாற்றிய ராய.சொக்கலிங்கம், தனது நூலில் கம்பனது மொழியாகவே சிவனைப் பற்றி 168-வது பாடல்களும், கம்பராமாயணத்தில் சிவனைப் பற்றி 227 இடங்களிலும் ஆக 395 இடங்களில் சிவனைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.[*]

பள்ளத்தூர் பழ.பழனியப்ப்ன்

'கம்பன் காட்டும் கண்ணுதலான்' என்ற நூலில் பள்ளத்தூர் பழ.பழனியப்பன் கம்பர், தனது இராமாயணத்தில் சற்றேறக் குறைய 478 இடங்களில் சிவபெருமான் பற்றிய குறிப்புகளைத் தந்து கொண்டே செல்லுகிறான் என்று குறிப்பிடுகிறார்.[**]

வீடணன்

சிவனைப் பற்றி கம்பன் காவியத்தில் வீடணன் 35 இடங்களில் பேசுகிறான்.

இலங்கை வேந்தன் இராவேணஸ்வரன்

இலங்கை வேந்தன் இராவேணஸ்வரன் சிவனைப் பற்றி 31 இடங்களில் கூறுகிறான்.

இராமன்

காப்பியத் தலைவன் இராமபிரான் சிவபிரானைப் பற்றி பத்தொன்பது இடங்களில் பகர்கின்றான்.

---

* அ.சிதம்பரநாதன், ராய.சொ.வின் கம்பனும் சிவனும் நூலின் முகவுரையில், ப. 13.

** பழ.பழனியப்பன், கம்பன் காட்டும் கண்ணுதலான், வானதி பதிப்பகம்,. சென்னை, டிசம்பர் 2011, முன்னுரை ப. xi.

விசுவாமித்திரன்

சிவனைப் பற்றி விசுவாமித்திரன் 17 இடங்களில் செப்புகின்றான்.

இந்திரசித்தன்

வீரத்தின் இலக்கணமான இந்திரசித்தன் சிவனைப் பற்றி 13 இடங்களில் பேசுகின்றான்.

சூர்ப்பணகை

இராவணன் தங்கை சூர்ப்பணகை சிவனைப் பற்றி 12 இடங்களில் பேசுகிறாள்.

வசிட்டன்

ஏழு இடங்களில் சிவனைப் பற்றி வசிட்டன் பேசுகிறார்.

சீதை

காவிய நாயகி சீதை ஆறு இடங்களில் சிவனைப் பற்றி குறிப்பிடுகிறார்.

சதானந்தன் – பரசுராமன் – சுக்ரீவன்

தலா ஐந்து இடங்களில் சதானந்தரும், பரசுராமனும், சுக்ரீவனும் சிவனைப் பற்றி பேசுகிறார்கள்.

தயரதன் – இலக்குவன் – சடாயு

தலா நான்கு இடங்களில் தயரதனும், இலக்குவனும், சடாயுவும் சிவனைப் பற்றி பேசுகின்றனர்.

சாம்பன் – மகோதரன் – அதிகாயன் – அரக்கர்கள்

தலா மூன்று இடங்களிலும், சாம்பனும், மகோதரனும், அதிகாயனும், அரக்கர்களும் சிவனைப் பற்றி பேசுகின்றனர்.

மண்டோதரி

சிவபக்தியிற் சிறந்தவளாகிய இராவணன் மனைவியாகிய மண்டோதரி மூன்று இடங்களில் சிவனைப் பற்றிப் பேசுகிறார்.

மாரீசன் – வாலி – இலங்கை மாதேவி –

அக்ககுமரன், சாரன், கும்பகன்னன் –

மாலியவான், வானரப்படைத் தலைவன், மாதலி

மேற்கூறிய ஒன்பது பேர்களும் சிவனைப் பற்றி தலா இரண்டு இடங்களில் பேசுகிறார்கள்.

நீலமாலை – பரதன் – கவந்தன் – சவரி, அங்கதன், தாரை, சம்பாதி, துன்முகன், சேனைத் தலைவன்,

பிரமன் புகைநிறக் கண்ணன், அகம்பன்

மேற்கூறிய பன்னிவரும் சிவனைப் பற்றி தலா ஒரு இடத்தில் கம்பராமாயணத்தில் பேசுகிறார்கள்.

*யுத்த காண்டத்தில் தான் சிவனைப் பற்றி அதிக அளவில் கம்பன் பேசுகிறான்.**

அனுமனும் சிவனும்

இராமபக்தனாகிய அனுமன் கம்பராமாயணத்தில் சிவனைப் பற்றி பதினைந்து இடங்களில் பேசுகிறான். கிட்கிந்தா காண்டம் நட்பு கோட் படலத்தில் நான்கு இடங்களிலும், சுந்தர காண்டத்தில் ஊர்தேடு படலத்தில் மூன்று இடங்களிலும் உருக்காட்டு படலத்தில் ஓரிடத்திலும் பிணி வீட்டு படலத்தில் மூன்று இடங்களிலும், திருவடி தொழுத படலத்தில் ஓரிடத்திலும், யுத்தகாண்டத்தில் நிகும்பலையாகப் படலத்தில் இரண்டு இடங்களிலும், மீட்சிப் படலத்தில் ஓரிடத்திலும் ஆக பதினைந்து இடங்களில் அனுமன் வாய்மொழியாகவே சிவனைப் பற்றி குறிப்புக்கள் வருகின்றன.

---

* ராய.சொ.முற்கூறிய நூல், ப. 351.

கிட்கிந்தா காண்டம்

நட்புக் கோட்படலம் – பாடல் 379

பல் இறுத்தவன்

"நல் உறுப்பு அமையும் நம்பியரில் முன்னவன் – நயந்து,
எல் உறுப்பு அரிய பேர் எழு சுடர்க் கடவுள்தன்
பல் இறுத்தவன் வலிக்கு அமை தியம்பகம் எனும்
வில் இறுத்தருளினான் – மிதிலை புக்க அனைய நாள்."

நல் உறுப்பு அமையும் - நல்ல உறுப்பிலக்கணம் அமைந்த; நம்பியரில் முன்னவன் - அவ்ஆண் மக்களுள் முன் பிறந்தவான இராமன்; மிதிலை புக்க அனைய நாள் - மிதிலை நகரத்துள் புகுந்த அந்த நாளில்; எல் உறுப்பு - ஒளி வீசும் கதிர்களை உறுப்பாக உடைய; அரிய பேர் எழுசுடர்க் கடவுள்தன் - அரிய பெரிய சூரிய பகவானின்; பல் இறுத்தவன் - பற்களை உதிர்த்தவனாகிய சிவபிரானின்; வலிக்கு அமை - வலிமைக்கு ஏற்ப அமைந்த. தியம்பகம் எனும் வில் - திரியம்பகம் என்று சொல்லப் பெறும் வில்லை; நயந்து - (வளைக்க) விரும்பி; இறுத்து அருளினான் - ஒடித்து அருளினான்.

"சூரியனார் தொண்டை வாயினிற்பற்களை
வாரி நெரித்த வாறுந்தீபற
மயங்கிற்று வேள்வி யென்றுந்தீபற"*

தங்கள் வேள்வியில் வீரபத்திரக் கடவுள் பூஷன் என்னும் சூரியனுடைய கன்னத்தில் அடித்து அவன் பற்களை இடம்பெயரச் செய்தார் என்ற வரலாற்றினை அறிக.

தியம்பகம் - திரியம்பகம் என்பதன் திரிவு; சிவ தனுசுவின் பெயர். மூன்று கண்களை உடையதால் திரியம்பகம் எனப்பட்டது. சுடர்மிகு கதிரவனின் பற்களைத் தகர்த்த

---

* திருவாசகம், திருவாவடுதுறை ஆதீனம், 1964, திருவுந்தியார் 15, ப. 684.

சிவபிரானின் வில்லை முறித்த இராமனுக்கு வாலியை வெல்வது எளிய செயலே எனக் சுக்கிரீவனுக்கு இங்குக் குறிப்பாக உணர்த்தப்பட்டது.*

நல்ல அங்கங்கள் அமையப் பெற்ற இந்நம்பியர் இருவருள் முன் பிறந்தவனான இராமன் மிதிலை நகரத்தை அடைந்த அந்த நாளில், இருளின் சுவடும் இல்லையாக்கத் தக்க பெரிய விளங்குகின்ற ஒளிக்கடவுளாகிய சூரியனின் பல்லை உடைத்தவனாகிய சிவபெருமானது வலிமைக்கு ஏற்ற, தியம்பகம் என்னும் வில்லை விரும்பி ஒடித்தருளினான்.**

தன்னை அவமதித்த தட்சமுனிவரது யாகத்தில் வீரபத்திர ரூபியாய்ச் சென்று பூஷா வென்னுஞ் சூரியனது பற்களை அதிர்த்த பரமசிவனென்க. திரியம்பகன் என்பதற்கு மூன்று கண்களையுடையவள் என்று பொருளாததால், திரியம்பகமென்பது சிவசம்பந்தமானதென்று பொருள்படும்.***

பாடல் 3795

பரமர் ஆம் அரன்

“கரன் முதல் கருணை
அற்றவர், கடற்படையொடும்
சிரம் உகச் சிலை குனித்து
உதவுவான்; திசை உளார்
பரம் உகப் பகை துமித்தருளுவான்;
பரமர் ஆம்

---

* அ.ச.ஞானசம்பந்தன் உரை, கிட்கிந்தா காண்டம், பக். 66–67.

** ராய.சொ.முற்கூறிய நூல், ப. 226.

*** ஸ்ரீ கம்பராமாயணம் நான்காவது கிஷ்கிந்தா காண்டம், திருவல்லிக்கேணி வை.மு.சடகோப ராமாநுஜாரியாரும், சே.கிருஷ்ணமாசாரியரும், வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியாரும் இயற்றிய விரிவுரையுடன் சென்னை கணேச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது, 1922, ப. 86.

அரன் முதல் தலைவருக்கு
அதிசயத் திறலினான்;"

கரன் முதல் கருணை அற்றவர் - (இந்த இராமன்) கரன் முதலான இரக்கமற்ற அரக்கர்களுடைய; *கடற் படையொடும்* - கடல் போன்ற பதினாலாயிரம் படை வீரர்களோடும்; *சிரம் உக* - (அவர்கள்) தலைகள் சிதறி விழ; *சிலை குனித்து* - வில்லை வளைத்து, முனிவருக்கு உதவி செய்தவனாவான்; *உதவுவான் திசை உளார்* - இந்திரன் முதலிய திசை காப்பவர்களின்; *பரம் உக* - துன்பச் சுமை குறையுமாறு; *பகை துமித்தருளுவான்* - (அறத்திற்குப்) பகையாய் உள்ளவர்களை அழித்து அருளுவான்; *பரமர் ஆம* - மேம்பட்டவர்களாகிய; *அரன் முதல் தலைவருக்கு* - சிவபிரான் முதலான தேவர்களுக்கும்; *அதிசயத் திறலினான்* - வியக்கத்தக்க வலிமையுடையவனு மாவான்.

கரன் - கடுமை உள்ளவன் என்பது பொருள். கரன் முதல் கருணை அற்றவர் என்பது - தூடணன், திரிசிரசு என்னும் இருவரையும் உள்ளடக்கிய அரக்கர் கூட்டம் ஆம், அரக்கர் கருணையற்றவர் என்பதை *இரக்கம் என்றொரு பொருள் இலாத நெஞ்சினர் அரக்கர் (2642)* என்ற அடியும் உணர்த்தும். இந்திரன் முதலிய திசைக் காவலர் இராவணனால் படும் துன்பமிகுதி தோன்றப் பரம் என்றான். பாரம் - பரம் எனக் குறுகியது. இராமன் அரன் முதலான தேவர்களிலும் மேம்பட்ட திறன் உடையவன் என்பதால் அதிசயத் திறலினான் என்றான். *சூரறுத்தவனும் சுடர்நேமியும், ஊரறுத்த ஒருவனும் ஓம்பினும் . . . வேரறுப் பென் வெருவன்மின் (2652)* என இராமனே கூறியுள்ளது காண்க. கடற்படை உவமை. அறத்திற்குப் பகையாய் உள்ளவர்களை அழிக்கவல்ல பேராற்றல் படைத்தவன் இராமன் என்பதை உணர்த்தி, அறத்திற்குப் பகையான வாலியை அழிப்பதும் உறுதி என்பதைச் சுக்கிரீவனுக்குப் புலப்படுத்தினான்.*

---

* அ.ச.ஞானசம்பந்தன், முற்கூறிய நூல், பக். 68–69.

*கரன் முதலிய அருள் அற்ற அரக்கர்களைக் கடல் போன்ற சேனையோடு தலைகள் சிந்துமாறு வில்லை வளைத்து (அறத்திற்கு) துணை செய்வான்; திக்குகளில் உள்ளவர்களுடைய பொருட்படுத்தாத பகைவர்களை அழித்து, அருள் செய்வான்; மேலான இறைவர்களாகிய சிவன் முதலிய தலைவர்களும் வியக்கத்தக்க ஆற்றலுடையான் (இராமன்).**

பாடல் 3822

சூலி தன் அருள் துறையின் முற்றினான்

> "நாலு வேதம் ஆம் நவை இல் ஆர்கலி
> வேலி அன்னவன், மலையின்மேல் உளான்,
> சூலிதன் அருள் துறையின் முற்றினான்,
> வாலி என்று உளான், வரம்பு இல் ஆற்றலான்"

நாலு வேதம் ஆம் - நான்கு வேதங்களாகிய; நவை இல் ஆர்கலி - குற்றமற்ற கடலுக்கு; வேலி அன்னவன் - வேலியைப் போலப் பாதுகாவலனாய் உள்ளவனும்; மலையின் மேல் உளான் - கைலாய மலையின் மேல் வீற்றிருப்பவனுமாகிய; சூலி தன் - சூலப்படையுடைய சிவபிரானின்; அருள் துறையின் - கருணையின் வழியில்; முற்றினான் - முதிர்ந்தவனாகி; வரம்பு இல் ஆற்றலான் - எல்லையற்ற வலிமை உடையவனாய்; வாலி என்று உளான் - வாலி என்று ஒருவன் உள்ளான்.

பரப்பாலும் பேரொலியாலும் வேதங்கள் ஆர்கலி எனப்பட்டன. சிவபிரான் நான்கு வேதங்களாகவும், வேதப் பொருளாகவும் விளங்கி, வேதங்களைக் காப்பதால் நான்கு வேதங்களுக்கும் வேலி அன்னவன் என்றார். நால் வேதன் காண் (தேவாரம் 6-8-3), மந்திரமும் மறைப்பொருளும் ஆனான் தன்னை (தேவாரம் 6-3-4) என்ற அடிகளைக் காண்க. சூலி - சூலாயுதத்தை உடையவன். அருள்துறையின் முற்றினான் - சிவபிரானின் அருளைப் பெற்றவன் என்பது பொருள். வாலி

---

* ராய.சொ.முற்கூறிய நூல், பக். 226 – 227.

சிவபக்தன் என்பதை, அட்ட மூர்த்தி தாள் பணியும் ஆற்றலான் (3625) பஞ்சின் மெல்லடியாள் பங்கன் பாதுகம் அலாது யாதும், அஞ்சலித்து அறியாச் செங்கை ஆணையாய் (4086) என்ற அனுமன், அங்கதன் கூற்றுகளாலும், தாரை புலம்பலிலும் (4101) காணலாம். திருவடகுரங்காடு துறை, திருக்குரங்கணில் முட்டம் என்னும் தலங்களில் வாலி சிவபிரானை வழிபட்டதாக அத் தல புராணங்கள் உணர்த்துகின்றன.*

நான்கு மறைகளாகிய பழுது இல்லாத நெல் பயிருக்கு வேலியாக அமைந்தவன்; கயிலாயத்தில் வீற்றிருப்பவனான சூலம் தாங்கிய சிவபெருமானின் திருவருள் வழியிலே முதிர்ச்சியடைந்தவன்; வாலி என்ற பெயரை உடையவன்; எல்லை அற்ற வல்லமை வாய்ந்தவன்.

நவை: குற்றம், சாலி: நெற்பயிர். மலை: கயிலைமலை, மறைகள் என்ற பயிருக்கு வேலி போன்றவன்; சிவன் அருள் திறத்து முதிர்ந்தவன்; எல்லை அற்ற ஆற்றலான் வாலி என்க. வாலி சிவபூசைச் செல்வன் என்பதை,

'கோலமா மலரொடு தூபமும் சாந்தமும் கொண்டு போற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினார் என்றும்**
நீலமா மணி நிறத்து அரக்கனை இருபது கரத்தொடு ஒல்க
வாலினால் கட்டிய வாலியார் வழிபட மன்னுகோயில்'***

எனவும் திருஞான சம்பந்தர் கூறுவர். அழகிய நறுமலரும் தூபமும் சந்தனமும் கொண்டு போற்றி வாலியார் வழிபட்ட வட குரங்காடுத் துறையைச் சிறப்பித்துப் பாடியது இத்திருப்பதிகம். நீலமாமணி நிறத்து அரக்கரான இராவணனை தன் வாளால் குழையக் கட்டிய ஆற்றலால் வழிபடப் பெற்ற பெருமை பெற்ற கோயில்.

---

* அ.ச.ஞானசம்பந்தன், முற்கூறிய நூல், ப. 88.

** திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம், திருவடகுரங்காடு துறை பதிகம் 6.

*** மேலது., பதிகம் 7.

பாடல் எண் 3860

காலன் காலமும் அறுக்கும் புங்கவன்

"செறுக்கும் வன்திறல் திரிபுரம்
தீ எழச் சினவிக்
கறுக்கும், வெஞ் சினக் காலன்தன்
காலமும் காலால்
அறுக்கும் புங்கவன் ஆண்ட பேர்
ஆடகத் தனி வில்
இறுக்கும் தன்மை, அம்
மாயவற்கு அன்றியும் எளிதோ?"

செறுக்கும் வன்திறல் - யாவரையும் வருத்துகின்ற மிக்க வலிமையை உடைய; திரிபுரம் - முப்புரங்களும்; தீ எழச் சினவி - நெருப்புப் பற்றி எரியும்படி சினங்கொண்டு; கறுக்கும் வெஞ்சினக் காலன் தன் - கோபித்து (மார்க்கண்டேயன் மீது) கொடிய சினங்கொண்ட யமனுடைய; காலமும் - ஆயுள் காலத்தையும்; காலால் அறுக்கும் - காலினால் உதைத்து அழித்துவிட்ட; புங்கவன் - மேலோனான சிவபிரான்; ஆண்ட - கையாண்ட; பேர் ஆடகத்தனி வில் - பெரிய பொன்மயமான ஒப்பற்ற வில்லை; இறுக்கும் தன்மை - முறிக்கின்ற செயல்; அம்மாயவற்கு அன்றியும் - அத்திருமாலுக்கு அல்லாது; எளிதோ - பிறர்க்கு எளிதாமோ? (ஆகாது).

*திரிபுரம் அழித்து, காலனையும் உதைத்த சிவபிரான் பற்றிய வில் என அவ்வில்லின் வலிமையும் பெருமையும் கூறி, அதனை வளைத்தவன் என இராமன் பெருமை கூறியவாறு, சீதையை மணக்க இராமன் வளைத்த வில் சிவன் வில். திரிபுரம் என்னும் கோட்டை அமைந்த மூன்று நகரங்களின் அழிக்கும் வலிமை தெரிய செறுக்கும் வன்திறல் திரிபுரம் என்றான். மார்க்கண்டேயனைப் பற்றிய யமனது சினம் தோன்றக் கறுக்கும் வெஞ்சினக் காலன் என்றான். சிவபிரான் அவனை அழித்த எளிமை தோன்றக் காலால் அறுக்கும் என உணர்த்தினான்.**

---

* அ.ச.ஞானசம்பந்தன், முற்கூறிய நூல், பக். 112 – 113.

(யாவரையும்) துன்புறுத்தும் வலிமிக்க முப்புரத்தைத் தீப்பட்டு எரியுமாறு, கொடுமை கொண்ட கடுங்கோபக் காலனின் வாழ்நாளையும் காலால் உதைத்து அழித்த, சிறந்த சிவபெருமான் கைக்கொண்ட பெரிய பொன்மயமான ஒப்பற்ற வில்லை ஒடிக்கும் ஆற்றல் அத் திருமாலுக்கே அன்றி ஏனையோர்க்கு எளிமை உடையது ஆகுமா?

*சினவி: கோபித்து. கறுக்கும் வெஞ்சினக் காலன் என்ற சொற்றொடர் நமனின் சினப் பெருக்கத்தைக் காட்டுகின்றது. ஆடகம்: பொன்.**

சுந்தரகாண்டம்

ஊர் தேடு படலம்

பாடல் 4844

"தேவர் என்பவர் யாரும் இத்திரு நகர்க்கு இறைவற்கு
ஏவல் செய்பவர், செய்கிலாதவர் எவர் என்னின்,
மூவர் தம்முளும் ஒருவன் அங்கு உழையனா முயலும்!
தாவில் மாதவம் அல்லது பிறிதொன்று தகுமோ?"

திருநகர்க்கு இறைவற்கு - இந்த இலங்கை அரசனுக்கு; தேவர் என்பவர் யாரும் - தேவர் என்று சொல்லப்படுபவர் அனைவரும்; ஏவல் செய்பவர் - அடிமைப்பணி புரிவோர்; (ஏவல்) செய்கிலாதவர் எவர் என்னின் - (அவனுக்கு) பணிபுரியாதவர் எவர் என்றால்; மூவர் தம்முளும் - மும்மூர்த்திகளில்; ஒருவன் - ஒருவனாகிய பிரமதேவன் அங்கு அந்த இலங்கையில் உழையனா முயலும் பணி செய்பவனாக முயல்கின்றான்; தா இல் மாதவம் அல்லது - குற்றமற்ற பெருந்தவம் அல்லது; பிறிது ஒன்று தகுமோ - வேறு ஒன்று செய்தற்குத் தகுதியுடையது ஆகுமோ.

* ராய. சொ.முற்கூறிய நூல், ப. 228.

மூவர் தம்முளும் இருவர்*

அமரர் என்று சொல்லப்படுகின்ற அனைவரும் இந்த இலங்கைத் திருநகரத்தில் தலைவனாகிய இராவணனுக்குப் பணிசெய்பவரேயாவார்; அப்படிப் பணி செய்யாதவர் யாரென்று கேட்டால், மும் மூர்த்திகளுள் சிவன், திருமால் என்ற இருவரேயாவர்; அவ்வாறானால், இனி முயன்று பெரும் குற்றமற்ற சிறந்த தவத்தைத் தவிர வேறொன்று தகுதியுடையது ஆகுமா?

சிவன் திருமால் தவிர எல்லாத் தேவரையும் இராவணன் ஏவல் கொண்டது. அவன் முயன்று பெற்ற தவத்தின் சிறப்பால் தவத்தைவிடச் சிறந்தது வேறு இல்லை என்க.

ராய.சொ. அவர்கள் கம்பனின் பாடலை இவ்வாறு தந்து சிவன் குறித்து விளக்கமளிக்கிறார்.**

"மூவர் தம்மினும் அதிகன் என்றால் இவன் முயன்ற"

என்பர் வை.மு.கோ. எண் வகையுரு நிலம், நீர், காற்று, வானம் என்ற ஐம்பெரும் பூதங்களும், சூரியனும், சந்திரனும் இருகடரும், எஜமானனும் என்ற அஷ்ட மூர்த்தி. இந்த மூர்த்தங்கள் எட்டும் சிவபிரானுக்கு உரியவெனச் சிறப்பாக நூல்களிற் கூறப்பட்டிருப்பினும் ஒற்றுமை நயம் பற்றி உபசார வழக்கால், அவற்றை மற்றையிரு மூர்த்திகளுக்கும் ஏற்றிக் கூறினார்.***

---

* அ.சா.ஞானசம்பந்தனின் பதிப்பில் பாடலில் 'ஒருவன்' என்றே உள்ளது. ராய. சொக்கலிங்கம் பதிப்பில் பாடல் 'இருவர்' என்று உள்ளது.

** ராய. சொ.முற்கூறிய நூல், ப. 229.

*** கம்பராமாயணம், ஐந்தாவது சுந்தரகாண்டம் வை.மு.சடகோப ராமாநுஜாசார்யரும் சே.கிருஷ்ணமாசார்யாரும், வை.மு.கோபாலக் கிருஷ்ணமாசார்யாரும் இயற்றிய உரையுடன் சென்னை ஆர்.ஜி. அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது, 1939, ப. 109.

பாடல் எண் 4975

கணிச்சியான் மகனோ?

> "வளையும் வாள்எயிற்று அரக்கனோ? கணிச்சியான் மகனோ?
> அளையில் வாள்அரி அனையவன் – யாவனோ? அறியேன்;
> இளைய வீரனும் ஏந்தலும், இருவரும், பலநாள்
> உளைய உள்ள போர் இவனொடும் உளது என உணர்ந்தான்"

அளையில் வாள் அரி அனையவன் - குகையில் உறங்கும் கொடுஞ் சிங்கம் போன்ற இவ்வீரன்; வளையும் வாள் எயிறு - வளைந்த ஒளியுள்ள பற்களையுடை; அரக்கனோ? - அரக்கர் குலத்தவனா (அன்றேல்); கணிச்சியான் - மழுப்படை ஏந்திய சிவபிரானின்; மகனோ? - புதல்வனாகிய முருகப் பெருமானோ? யாவனோ - எவனோ (யாரென) அறியேன் - அறியாமல் உள்ளேன் (ஆனால்); இளைய வீரனும் - இளமைப் பருவமுடைய இலக்குவனும்; ஏந்தலும் - சரண் புக்காரைக் காக்கும் இராமபிரானும் (ஆகிய); இருவரும் - இரண்டு மகா வீரர்களும்; உளைய - மன உளைச்சல் அடையும்படி; உள்ள போர் - இனி நிகழக்கூடிய யுத்தம்; பல நாள் - பல நாள்கள்; இவனொடும் - இந்த வீரனுடன்; உளது - நிகழப் போகிறது; என - என்ற உண்மையை; உணர்ந்தான் - அறிந்தான்.

கணிச்சி - மழு. கணிச்சி மணிமிடற்றோன் (புறம் 56) அளை - குகை. இவனை யார் என அறியேன். ஆனால் இவன் போர் வல்லான் என்பதை அறிகிறேன் என்ற அனுமனின் தீர்க்கதரிசனம் கூர்மையானது. ஏந்தல் - சரணாகதி அடைந்தவரை ஏந்துபவன். காரணப் பெயர் (141) இந்திரசித்தன் ஆற்றலை அனுமன் வியத்தலாகும் வருவது இது.*

குகையில் வாழ்கின்ற சிம்மத்தை ஒத்தவனாகிய இவன், வளைந்த ஒளி உள்ள கோரப் பற்களைப் பெற்ற அரக்கனா? அன்றி, மழுப்படை தாங்கிய சிவபிரான் மைந்தனா? இவன்

---

* முற்கூறிய அ.ச.ஞானசம்பந்தன் உரை, ப. 162.

யாரேரா? தெரியவில்லையே! இளைய வீரனாகிய இலக்குவனும், ஏந்தலாகிய இராமனும், இருவரும் சேர்ந்தும் பல நாள் இவனொடும் வருந்திச் செய்ய வேண்டிய போர் இருக்கின்றது என்று உணர்ந்தான் (அனுமன்).

*அளை: குகை. அரி: சிம்மம், உளைய: வருந்த, இந்திர சித்தனின் தோற்றத்தைக் கண்டு இவனை வெல்ல இலக்குவன் போர் செய்தல் வேண்டும்; அவனால் ஆகாது. இராமன் போர் செய்தல் வேண்டும். அவனாலும் தனித்து வெல்லுதல் ஆகாது; பின்னர் இருவரும் சேர்ந்து போரிட வேண்டும். அதுவும் ஒரு நாளில் முடியாது. பல நாள் வேண்டும்; அது கடுமையான போராகவும் அமையும் என்று முடிவு கட்டுகின்றான் அனுமன் என்க.**

பாடல் எண் 4976

சிவன் – திருநெடுமாலாம் அவனை

> "இவனை இன்துணை உடையபோர் இராவணன் என்னே
> புவனம் மூன்றையும் வென்றது ஓர் பொருள் எனப் புகறல்?
> சிவனை நான்முகத் தொருவனைத் திருநெடு மாலாம்
> அவனை அல்லவர் நிகர்ப்பவர் என்பதும் அறிவோ?"

சிவனை - சிவபெருமானும்; நான்முகத்து ஒருவனை - நான்கு முகம் கொண்ட பிரம்மதேவனும்; திருநெடுமாலாம் அவனை - திருமால் என்று புகழப்படும் அவனும்; அல்லவர் - அல்லாத தேவர்கள் (இவனை); நிகர்ப்பவர் என்பதும் - ஒப்பாவார் என்று கூறுவதும்; அறிவோ - அறிவாகுமோ? இவனை - இந்த வீரனை; இன் துணையுடைய - நல்ல உதவியாளனாகப் பெற்ற; போர் இராவணன் - போர் விருப்பம் பெற்ற இராவணன்; புவனம் மூன்றையும் - மூன்று உலகங்களையும்; வென்றது - வெற்றி கொண்டது; ஓர் பொருள் எனப் புகறல் - ஒரு அருஞ்செயல் என்று கூறுவது; என்னே - என்ன அதிசயம்.

---

* ராய.சொ.முற்கூறிய நூல், ப. 230.

மும்மூர்த்திகட்குச் சமமான வீரனைத் துணையாகப் பெற்ற இராவணன் மூன்று உலகத்தை வென்றது செயற்கரும் செயலன்று. சிவனை, ஒருவனை, அவனை - என்பதில் உள்ள ஐ வேற்றுமையன்று. அசை - நாடார் புகழாளை - கூறி, என்ற (சிந்-26 பதி) இடத்தில் புகழாள் - விசயை, ஐ - அசை என்று இனியர் குறித்தார். பொருள் - செயல். ஒரு பொருள் சொல்லுவதுடையேல் (கலி.8) என்ற இடத்தில் இனியர் வரைந்ததைக் காண்க (142).*

இந்த இந்திரசித்தனை இனிய துணையாகக் கொண்ட பெருமையுள்ள இராவணன், மூன்று உலகங்களையும் வென்றமையை ஓர் பொருட்டாகப் பாராட்டிச் சொல்லுதலல் என்ன சிறப்பு இருக்கிறது? சிவபெருமானை, பிரமதேவனை, திருநெடுமாலைத் தவிர, பிற எவரையும் இவனுக்கு நிகராகக் கூறுவது அறிவுடைமையாகுமா?**

பாடல் எண் 5311

உருக்காட்டுப் படலம்

நல்மத்தம் நாகம் தலைசூடிய நம்பன்

> "கன்மத்தை ஞாலத்தவர் யார் உளரே கடப்பார்?
> பொன் மொய்த்த தோளான், மயல் கொண்டு, புலன்கள் வேறாய்,
> நல் மத்தை நாகத்து அயல் சூடிய நம்பனேபோல்,
> உன்மத்தன் ஆனான், தனை ஒன்றும் உணர்ந்திலாதான்."

பொன் மொய்த்த தோளான் - திருமகள் தங்கிய தோள்களை உடைய இராமபிரான்; ஒன்றும் - சிறிதும்; தனை உணர்ந்திலாதான் - தன்னை அறிந்து கொள்ளாமல் ; மயல்

---

* அ.ச.ஞானசம்பந்தன், முற்கூறிய நூல், ப. 163.

** ராய.சொ.முற்கூறிய நூல், ப. 230.

கொண்டு - பிராட்டியின்பால் காதல் மிகுந்து; புலன்கள் வேறு ஆய் - ஐம்புலன்களும் நிலை திரிந்து (உமையைப் பிரிந்த); நல்மத்தம்- நல்ல ஊமத்தம் பூவையும்; நாகத்து அயல் - பாம்பின் அருகில்; சூடிய - அணிந்த; நம்பனே போல் - சிவபிரானைப் போல; உன்மத்தன் ஆனான் -பித்தம் பிடித்தவன் ஆனான்; (ஆகையால்) ஞாலத்தவர் - உலகில் உள்ளவர்களுள்; கன்மத்தை - வினையின் நுகர்ச்சியை; கடப்பார்- வெற்றி கொண்டவர்; யார் உளர் - எவர் உள்ளனர்.

கடப்பார் - வெற்றி கொள்பவர். கடப்பார் எவரே கருவினையை என்பர் புகழேந்தியார். மொய்த்தல் - தங்குதல் (இருத்தல்) மொய்த்தல் என்பது கொடுத்தலும் இருத்தலும் (அகராதி நிகண்டு. மொம் முதல் 5) சிவபிரானைப் பித்தன் என்று பேசுவது மரபு.*

அனுமன் சீதையிடம் இராமனைப் பற்றிக் கூறுவதாக வரும் பாடல் இது.

உலத்தவர், வினைப் பயனைக் கடக்க வல்லவர் யாரோ உள்ளார்? வீர இலக்குமி பரவிய தோளை உடையானாகிய இராமன் மயக்கம் அடைந்து, ஐம்புல நுகர்ச்சியில் மாறுபட்டு, தன்னைச் சிறிதும் உணராமல் நல்ல ஊமத்தம் பூவையும், பாம்பையும் தலையில் அணிந்த சிவபெருமானைப் போலப் பித்தனாக ஆகிவிட்டான்.

கன்மம்: வினைப்பயன். பொன்: வீர இலக்குமி, மயல்: மயக்கம், புலன்கள் வேறாய்: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புல நுகர்ச்சியில் வெறுப்படைந்தது. நம்பன்: சிவபெருமான். உன்மத்தன்: பித்தம் பிடித்தவன். சீதையைப் பிரிந்தமையால், இராமன் கடவுள் பிறப்பாகிய தன் சிறப்பை உணராமல் மயங்கி, புலன்களில் மாறுபட்டு, பித்தன் ஆனான் என்க.

---

* அ.ச.ஞானசம்பந்தன், முற்கூறிய நூல், ப. 394.

தேவியைப் பிரிந்த போதே திகைத்தனை போலும் செய்கை என்பது ஈண்டு நினைவுகூரத் தக்கது.[*]

ஈசன் கயிலை அம்கிரி

பிணி வீட்டு படலம்

பாடல் எண் 5881

"தேவரும் பிறரும் அல்லன்; திசைக் களிறு அல்லன்; திக்கின்
காவலர் அல்லன்; ஈசன் கைலை அம்கிரியும் அல்லன்;
மூவரும் அல்லன்; மற்றை முனிவரும் அல்லன்; எல்லைப்
பூவலயத்தை ஆண்ட புரவலன் புதல்வன் போலாம்;"

தேவரும் பிறரும் அல்லன் - (அந்தவில் வீரன்) தேவர்களும் மற்றை அசுரர்கள் முதலியோரும் அல்லன்; திசைக்களிறு அல்லன் - திக்கயங்களில் ஒன்றும் அல்லன்; திக்கின் காவலர் அல்லன் - திக்பாலகர்களில் ஒருவனும் அல்லன்; ஈசன் கைலை அம் கிரியும் அல்லன் - சிவபிரானுடைய கைலை என்னும் அழகிய மலையும் அல்லன்; மூவரும் அல்லன் - மும்மூர்த்திகளுள் அல்லன்; எல்லை பூவலயத்தை ஆண்ட - பூமியின் எல்லை எவ்வளவு உண்டோ அவ்வளவையும் அரசாட்சி செய்த; புரவலன் புதல்வன் போலாம் - ஒரு பேரரசனுடைய குமாரனேதான் அவன்.

அந்த வில் வீரன், உன்னால் வெல்லப்பட்ட தேவர் முதலியோர் அல்லன்; வெல்லப்படாத ஒரு சக்கரவர்த்தியின் புதல்வன் என்றவாறு, இராவணனிடம் தோற்றவர்களும், தோற்றவைகளும், அவனை வெல்வதற்கு பழி வாங்குவதற்கு வேற்றுருவம் கொண்டு வந்தவன் அல்லன் இந்த வில் வீரன் என்பது கருத்து.[*]

---

* ராய.சொ.முற்கூறிய நூல், ப. 231.

** அ.ச.ஞானசம்பந்தன், முற்கூறிய நூல், பக். 748 – 749.

(என்னைத் தூது அனுப்பிய அந்த வில் வீரன் யார் என்றால்) அமரரும் அல்லாதாரும் அல்லன்; திக்கு யானைகள் அல்லன்; திக்குப் பாலகர் அல்லன்; சிவனுடைய கைலை மலையும் அல்லன்; மும்மூர்த்திகளும் அல்லன்; ஏனைய இருடிகளும் அல்லன்; பூ உலகை எல்லையாகக் கொண்டு ஆண்ட மன்னன் (தயரதன்) மகன் ஆவான்.*

பாடல் எண் 5884

காலமும் கணக்கும் நீத்த காரணன்

“மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆய
காலமும், கணக்கும், நீத்த காரணன் – கை வில் ஏந்தி,
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப்பொருப்பும் விட்டு அயோத்தி
வந்தான்;”

மூலமும் நடுவும் ஈறும் இல்லது - முதலும் நடுவும் முடிவும் இல்லாது என; ஓர் மும்மைத்து ஆய காலமும் - இறப்பு, நிகழ்வு, எதிர்பு என இலக்கண முறையால் வகுத்துக் கூறப்படும் மூன்று காலங்களையும்; கணக்கும் - இவ்வளவினது என்று கணித நூலால் கூறப்படும் எண்ணிக்கையையும்; நீத்த காரணன் - கடந்து நின்ற (எல்லாப் பொருள்களுக்கும்) காரணனாய அந்த முழு முதல் பொருள்தான்; சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து - சூலத்தையும், சக்கரம் சங்கு ஆகியவற்றையும், கமண்டலத்தையும் (தன் கையில் கொள்ளாது) விட்டு; கை வில் ஏந்தி - கையில் வில்லை ஏந்திக் கொண்டு; தொல்லை ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு - பழமையாகத் தனக்கு உரிய இடங்களாகிற ஆலிலையையும் தாமரை மலரையும் கைலாய மலையையும் இடமாகக் கொள்ளாது விட்டு, அயோத்தி வந்தான் - அயோத்தி மாநகரில் இராமபிரானாக அவதரித்தான்.**

---

* ராய.சொ.முற்கூறிய நூல், ப. 232.

** அ.ச.ஞானசம்பந்தன், முற்கூறிய நூல், பக். 750 – 751.

*மும்மைத்தாய காலம்; சென்ற காலம், நிகழ்காலம், வரும் காலம். சூலம் சிவனுக்கும், திகிரி, சங்கு திருமாலுக்கும், கரகம் பிரமனுக்கும் உரிய பொருள்கள். அவற்றை விட்டுவிட்டு வில்லைத் தூக்கிக் கொண்டான்; ஆல்இலை திருமாலுக்கும், மலர் பிரமனுக்கும், வெள்ளிப் பொருப்பு சிவனுக்கும் உரிய இடங்கள். அவற்றை விட்டான்; அயோத்தி வந்தான்; எனவே இராமன் மும்மூர்த்திகளும் ஒருங்கே வந்து தோன்றிய ஒருவன் எனக் கொள்க.**

பாடல் எண் 5907

"புரம் பிழைப்பு அருந் தீப்புகப் பொங்கியோன்,
நரம்பு இழைத்தன பாடலின் நல்கிய
வரம் பிழைக்கும்; மறை பிழையாதவன்
சரம் பிழைக்கும் என்று எண்ணுதல் சாலுமோ?"

புரம் பிழைப்பு அரும் தீபுக பொங்கி யோன் - திரிபுரங்களும் தப்புதற்கு அரிய நெருப்பு மண்டி அழிக்குமாறு,. கோபித்த சிவபெருமான்; நரம்பு இழைத்தன பாடலின் - உன் கை நரம்புகளைக் கொண்டு நீ பாடிய பாடல்களுக்காக; நல்கிய வரம் பிழைக்கும் - மனம் உவந்து கொடுத்தருளிய வரமானது தவறினாலும் தவறும்; மறை பிழையாதவன் - வேத நெறி தவறாதவனான இராமபிரானுடைய; சரம் பிழைக்கும் என்று எண்ணுதல் சாலுமோ? - அம்பு தவறிப் போகும் என்று நினைத்தல் பொருந்துமோ? (பொருந்தாது என்றபடி).

*சிவபெருமான் இராவணனுக்குத் தந்த வரம் தவறினாலும் தவறலாம்; ஆனால் இராமபிரானுடைய அம்பு தன் குறியினின்றும் தவறாது என்பதாம்.***

இராமன் அம்பு தப்பாது என இராவணனுக்கு அனுமன் இடித்துக் கூறுவதாக வருவது இப்பாடல்.

---

* ராய.சொ. முற்கூறிய நூல், ப. 233.

** அ.ச.ஞானசம்பந்தன், முற்கூறிய நூல், ப. 764.

முப்புரத்தை எவரும் தப்ப முடியாதபடி தீப்பற்றி எரியுமாறு சினந்தெழுந்த சிவபெருமான், நரம்புகளைக் கொண்டு இசைத்த உன் பாடலுக்கு இரங்கி, தந்தருளிய வரம் பிழைபடும்; மறை வழியில் தவறாதவனான இராமன் விடும் அம்புகள் தவறும், என நீ எண்ணுதல் பொருந்துமா?

இராவணன் மறை பிழைத்தவன் ஆதலின் அவன் பெற்ற வரம் பிழைக்கும் என்றும், மறை பிழையாத இராமனின் சரம் பிழைக்காது என்றும் கொள்க. கைலையின் கீழ் அகப்பட்டு திணறிய இராவணன், தன் தலையில் ஒன்றைக்கிள்ளி, அதனை வீணையாகவும், தன் நரம்புகளில் சிலவற்றைப் பிடுங்கி, தந்தியாகவும் கொண்டு, இசைபாடி, சிவபெருமானை மகிழ்வித்து, சிவபெருமானிடம் வரம் பல பெற்றான் என்பது வரலாறு.*

திருவடி தொழுத படலம்

பாடல் எண் 6040

பாகத்தாள் ஈசன் மகுடத்தான்

"சோகத்தாள் ஆய நங்கை கற்பினால், தொழுதற்கு ஒத்த
மாகத்தார் தேவிமாரும், வான் சிறப்பு உற்றார்; மற்றைப்
பாகத்தாள், இப்போது ஈசன் மகுடத்தாள்; பதுமத்தாளும்
ஆகத்தாள் அல்லள், மாயன் ஆயிரம் மௌலி மேலாள்."

சோகத்தாள் ஆய நங்கை - (உன்னைப் பிரிந்த பெரும்) துக்கத்தை உடையவளான பிராட்டியின்; கற்பினால் மாகத்தார் தேவிமாரும் - கற்பின் சிறப்பால், வானில் உள்ள தேவர்களின் மனைவிமார்களும்; தொழுதற்கு ஒத்த வான் சிறப்பு உற்றார் - யாவரும் வணங்குவதற்கு ஏற்ற பெருஞ்சிறப்பை அடைந்தார்; மற்றை ஈசன் பாகத்தாள் இப்போது மகுடத்தாள் - அதுவல்லாமல் சிவபிரானது உடம்பின் ஒரு பாகத்தில் இருக்கும் உமாதேவி, இந்தச் சமயத்தில் அப்பெருமானது

---

* ராய.சொ. முற்கூறிய நூல், ப. 233.

தலைமேல் இருக்கும் சிறப்பினை உடையவளானாள்; பதுமத்தாளும் - தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளும்; மாயன் ஆகத்தாள் அல்லன் - இனித் திருமாலின் திருமார்பில் வீற்றிருக்கத் தக்கவள் அல்லள் (அப்பெருமானது) ஆயிரம் திருமுடிகளின் மேலிருக்கத் தக்கவளாவாள்.

உயர்ந்தோர் ஒருவரால், மற்றையோரும் சிறப்படைவர் என்பதற்கிணங்க, பிராட்டியின் கற்புச் சிறப்பால், மற்றைத் தெய்வ மகளிர், உமாதேவி, திருமகள் முதலியோரும் சிறப்படைந்தனர் என்பதாம். சிறையிருந்தாள் ஏற்றத்தால் மாதர் குல ஏற்றம் சொல்லுகிறது. இச்செய்யுள் என்கின்றான் கம்பன்; பரம வைஷ்ணவனாதலின் என்ற பிள்ளை லோகாசாரியார் வாக்கும் நோக்கத்தக்கது.*

துன்பமே வடிவெடுத்து, சிறை இருந்த செல்வியாகிய சீதையின் கற்புக் காரணமாக, (இயல்பாகவே) தொழத் தகும் சிறப்புப் பெற்ற வான் நாட்டில் வாழ்வாராகிய இந்திரன், பிரமன் உள்ளிட்ட அமரர்களின் மனைவிமார்களும் (மேலும்) பெரிய சிறப்பை அடைந்தனர்; ஈசனின் ஒரு புறத்திலே உள்ள உமையவள், இப்போது (ஈசன் பாகத்தாள் அல்லள்) அவன் மகுடத்தாள் ஆவாள்; பதுமத் தாளாய திருமகளும் (இனி) மாயன் மார்பினாள் அல்லள்; அவன் ஆயிரம் முடியின் மேல் ஏறி இருக்கும் தகையினாள்.

சோகம்: துக்கம், நங்கை: சீதை, மாகம்: வான். ஈசன்: சிவன். மகுடம்: முடி. பதுமம்: தாமரை. ஆகம்: மார்பு. மாயன்: திருமால், மௌலி: மூடி. சீதையின் கற்புப் பெண் குலத்தையே உயர்த்திவிட்டது; ஈசன் உமையை இனித் தலையில் தூக்கி வைத்துக் கொண்டுதான் ஆடுதல் வேண்டும்; திருமாலும் அப்படித்தான். இன்னும் திருமால் திருவை ஆயிரம் முடிக்கும் மேலே ஏற்றிக் கொள்ளல் வேண்டும் எனக் கொள்க.**

---

* அ.ச.ஞானசம்பந்தன், முற்கூறிய நூல், பக். 846 – 847.

** ராய.சொ.முற்கூறிய நூல், ப. 234.

யுத்த காண்டம்

நிகும்பலை யாகப்படலம்

பாடல் எண் 9007

பண்டை ஈசனார் படையோ?

> "பாசமோ, மலரின் மேலான் பெரும் படைக்கலமோ, பண்டை
> ஈசனார் படையோ, மாயோன்; நேமியோ, யாதோ, இன்னம்
> வீச, நீர் விரும்புகின்றீர்? அதற்கு நாம் வெருவி, சாலக்
> கூசினோம்; போதும், போதும்; கூற்றினார் குறுக வந்தார்."

*பாசமோ? மலரின் மேலான் பெரும் படைக்கலமோ - நாக பாசமோ? தாமரை மலரில் இருப்போனாககிய பிரமனது பெருமை வாய்ந்த படைக்கலமோ? பண்டை ஈசனார் படையோ, மாயோன் நேமியோ, யாதோ - (எல்லாப் பொருட்கும்) பழையோனாகிய சிவபெருமானின் (பாசுபதப்) படையோ? திருமாலது சக்கரப் படையோ? வேறு யாதோ? இன்னம் வீச நீர் விரும்புகின்றீர்? - இனிமேலும் எங்கள் மேல் ஏவுதற்கு நீர் விரும்பியுள்ளீர்? அதற்கு நாம் வெருவிச் சாலக் கூசினோம் - (நும்மால் செலுத்தப்படும்) அப்படைக்கலத்திற்கு நாங்கள் மிகவும் அஞ்சி நடுக்கமுற்று ஒடுங்கினோம்; போதும் போதும் கூற்றினார் குறுக வந்தார் - (நீர் அவற்றை எம்மேல் வீசியது) போதும் போதும், கூற்றுவனார் நெருங்கி வந்து விட்டார்.**

இந்திர சித்தனிடம் அனுமன் நகையாடிப் பேசுவதாக வரும் பாடல் இது.

நாக பாசமோ? தாமரை மேல் வாழும் பிரமதேவனின் பெரிய படைக்கலமோ? பழைமையான சிவபெருமான் வாளியோ? திருமாலின் சக்கரமோ? வேறு யாதோ? (எங்கள் மீது) நீர் எறிய நினைக்கின்றீர்; அந்தப் படைக்கு நாங்கள்

---

* அ.ச.ஞானசம்பந்தன், கம்பராமாயணம், யுத்தகாண்டம் II, கோவை, 2004, ப. 804.

*அஞ்சிப் பெரிதும் பின் வாங்கினோம்; உங்கள் ஆற்றல் அமையும், அமையும்; (உங்களுக்கு) எமனார் நெருங்கி வந்துவிட்டார்.**[*]

பாடல் எண் 9009

விடம் துடிக்கின்ற கண்டத்து அண்ணல்

"விடம் துடிக்கின்ற கண்டத்து அண்ணலும்,
விரிஞ்சன்தானும்,
படம் துடிக்கின்ற நாகப் பாற்கடல் பள்ளியானும்,
சடம் துடிக்கிலராய் வந்து தாங்கினும், சாதல் திண்ணம்;
இடம் துடிக்கின்றது உண்டோ? இருத்திரோ? இயம்புவீரே!"

விடம் துடிக்கின்ற கண்டத்து அண்ணலும், விரிஞ்சன் தானும் - (ஆலகால) நஞ்சு நிறைந்து ததும்புகின்ற கண்டத்தினை உடைய சிவ பெருமானும் பிரமதேவனும்; படம் துடிக்கின்ற நாகப் பாற்கடல் பள்ளியானும் - படம் விரித்து எழுகின்ற (ஆதி சேடனாகிய) பாம்பணையின் மேற் பாற்கடலில் பள்ளி கொள்வோனாகிய திருமாலும்; சடம் துடிக்கிலராய் வந்து தாங்கினும் சாதல் திண்ணம் - உடல் நடுங்காதாராய் வந்து (உமக்குத் துணையாய்) தாங்கிப் பாதுகாத்தாலும் (போரில்) சாவது உறுதி; இடம் துடிக்கின்றது உண்டோ? இருத்திரோ? இயம்புவீரே! - (உமக்கு) இடப்பக்கம் துடிக்கின்றதல்லவா? (இனியும் நீர்) உயிருடன் இருப்பீரோ? சொல்வீராக.[*]

நஞ்சு பொங்குகின்ற கழுத்தை உடைய அண்ணலாம் சிவபெருமானும், பிரமனும், படம் விரித்து ஆடுகின்ற பாம்புப் படுக்கையில் பாற்கடலில் பள்ளிகொண்ட திருமாலும், உடல் நடுங்காதவராகி வந்து, (உங்களை) தாங்கினாலும் நீங்கள் அழிவது உறுதி; (உங்களுக்கு) இடப்பக்கம்

---

* ராய.சொ.முற்கூறிய நூல், ப. 235.

** அ.ச.ஞானசம்பந்தன், முற்கூறிய நூல், ப. 805.

துடிக்கின்றதல்லவா? இன்னும் உயிருடன் இருக்கப் போகின்றீர்களா? சொல்லுங்கள்.[*]

மீட்சிப் படலம்

பாடல் எண் 10231

நாரி ஓர் பாகத்து அண்ணல்

"நான்முகன், விடையை ஊரும் நாரி ஓர் பாகத்து அண்ணல்,
மான்முகன் முதலாய் உள்ள வானவர் தொழுது போற்ற,
ஊன்முகம் கெழுவு வேலாய்! உம்பர் நாயகியைச் சீறி,
தேன் முகம் மலரும் தாரான், அரி சொல, சீற்றம் தீர்ந்தான்."

ஊன்முகம் கெழுவு வேலாய்! - பகைவரது புலால் பொருந்திய வேலை உடைய பரதனே!; நான்முகன், விடையை ஊரும் நாரிஓர் பாகத்து அண்ணல், மான்முகன் முதலாய் உள்ள வானவர் தொழுது போற்ற - பிரமன், சிவன், மயன் முதலிய தேவர்கள் துதிக்க; உம்பர் நாயகியைச் சீறி - தேவ தேவியாகிய சீதையைக் கோபித்து; தேன் முகம் மலரும் தாரான் - தேன் நின்று பீலிற்றும் மாலையுடைய இராமன் (பின்னர்); அரி சொல - அக்கினி தேவன் உண்மை விளக்கி உரைக்க. சீற்றம் தீர்ந்தான் - கோபம் நீங்கப் பெற்றான்.[**]

பிரமதேவனும், காளை ஏறும் மாதோர் பாகத்து அண்ணலாகிய சிவபெருமானும், மான்முகத்தை உடைய மயன் முதலாய தேவர்களும் வணங்கித் துதிக்க, தசையை நுனியிலே கொண்ட வேலாயுதத்தை உடைய பரதனே! மேலான தலைவியாகிய சீதையைக் கோபித்து, தேனைத் தன்னிடத்துக் கொண்ட மலர்கின்ற பூமாலை அணிந்த இராமபிரானானவன், தீக்கடவுள் சான்று பகர, சினம் நீங்கினான்.

அரி: அக்கினிக் கடவுள். மாற்றான் சிறையில் இருந்த சீதையை இராமன் சீற, அவள் தீக்குளித்து எழுந்ததால்,

---

* ராய.சொ.முற்கூறிய நூல், ப. 236.

** அ.ச.ஞானசம்பந்தன், கம்பராமாயணம், யுத்தகாண்டம் III, கோவை, 2004, பக். 565 – 566.

*தீக்கடவுள் அவள் திறத்துக்குச் சான்று சொல்ல, அதனால் இராமன் சீற்றம் தீர்ந்தான் என்பது கருத்து.**

வை.மு.கோ

*விருஷபத்தை வாகனமாக ஏறி நடத்துகிறவனாகிப், பார்வதி தேவியை ஒப்பற்ற இடப்பாகத்திற் கொண்டவனான பரமசிவனும் என்று சிவனைப் பற்றி இப்பாடலுக்கு விளக்கம் தருவார் வை.மு.கோ.***

K. பட்சிராஜன்

இந்தியன் ஆயில் மண்ணெண்யெய் வியாபாரம் (நெல்லை சங்கீத சபா எதிரில், திருநெல்வேலி) வி.என். ஆவுடையப்பன் செட்டியார், அச்சிட்டு வழங்கிய நூல் ஸ்ரீ ஆஞ்சநேயர் (தமிழில்) அருச்சனை. இதனை பல்லாண்டுகளுக்கு முன்பே தொகுத்தவர் திருநெல்வேலி ஜங்ஷன் வழக்குரைஞர் K.பட்சிராஜன், 'அருள்மிகு அனுமன் போற்றி' எனும் நூலினை 2006-இல், தமிழக அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியிட்டது. ஆஞ்சநேய புராணம் வித்துவான் எம்.நாராயண வேலுப்பிள்ளையால் எழுதப்பெற்று வி.கரு.இராமநாதனால் பதிப்பிக்கப்பட்டது (1982) ஜெர்மனியிலும், ஆங்கிலத்திலும் வெளிவந்த வீரமாருதி நூலினை தமிழில் தபஸ்யா தந்தார் (1995). ஸ்வாமி பொய்யா மொழியார் ஸ்ரீ ஆஞ்சநேர் கவசம் வழிபாடு நூல் தந்தார். ஸ்ரீ ஆஞ்சநேயர் திருத்தல வரலாறு நூலினை அசோக்லேலண்ட் ஆஞ்சநேய பக்த சபை சென்னை தந்தது (2000).

மு.திரவியம் அருள்மிகு ஆஞ்சநேயர் கோயில்களும் வழிபாடும் நூல் தந்தார் (1994).

1996-இல் திருமதி பத்மஜா அனந்தராமன் ஸ்ரீ ஆஞ்சநேயர் எனும் நூல் தந்தார்.

---

* ராய.சொ.முற்கூறிய நூல், ப. 236.

** கம்பராமாயணம் ஆறாவது யுத்தகாண்டம், பிற்பகுதி, வை.மு.கோபாலக்கிருஷ்ணமாச்சார்யார் 17, தெளிசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி இயற்றிய உரையுடன் சென்னை உமாபதிப்பக அச்சுக் கூடத்திற் பதிப்பித்தது, 1932, ப. 860.

டாக்டர் எம்.மதுசூதனப் பெருமாள் ஆஞ்சநேயர் அருளிய வாழ்வியல் நெறிகள் நூல் தந்தார் (2002)

எல்.உலகநாதபிள்ளை

தஞ்சாவூரிலிருந்து 1937-இல் எல்.உலகநாதபிள்ளை 'அனுமான் இராமதூதன்' எனும் 94 பக்கங்களைக் கொண்ட நூலினைத் தந்துள்ளார்.

மு.இராகவையங்கார்

கம்பன் மலரில் 1944-இல் மு.இராகவையங்கார் மாருதியின் சீரிய மாண்பு எனும் கட்டுரை தந்தார். பிறகு அவரது கட்டுரைகள் பல இணைக்கப்பட்டு 1969-இல் 'தெய்வப் புலவர் கம்பர்' எனும் நூல் 155 பக்கங்களில் வெளிவந்தது.

மாருதியின் சீரிய மாண்பு

அரக்கரது புஜபல பராக்கிரமங்களை அளவு கடந்து புகழ்ந்த வீபிடணன் அப்புகழ்ச்சியினின்று திடீரென்று மாறி,

"ஈடுபட்டவர் எண்ணிலர்; தோரணத்து எழுவால்
பாடுபட்டவர் படுகடல் மணலினும் பலரால்
சூடு பட்டது கொடிநகர்; அடுபுலி துரந்த
ஆடு பட்டதே பட்டனர், அநுமனால் அரக்கர்,*

சேனைக் காவலர் ஓரைவர் உளர், பண்டு தேவர்
வானைக் காவலும் மானமும் மாற்றிய மறவர்;
தானைக் கார்வருங் கடலொடுந் தமரொடுந் தாமும்
ஆனைக் கால்பட்ட செல்லென்ன ஒல்லையின் அவிந்தார்.**

எங்கு லத்தவர் எண்பதி னாயிரர் இறைவர்,
கிங்க ரப்பெயர்க் கிரியன்ன தோற்றத்தர் கிளர்ந்தார்;
வெங்க ரத்தினும் காலினும் வாலினும் வீக்கச்
சங்க ரற்கழி முப்புரத் தவர்எனச் சமைந்தார்.***

---

* யுத்தகாண்டம் வருணனை வழிவேண்டு படலம், பாடல் 6575.

** மேலது, பாடல் 6578. *** மேலது, பாடல் 6576.

சொன்ன மாமதில் இலங்கையின் பரப்பிது, துகைத்துச்
சின்ன மானவர் கணக்கிலர்; நீங்களே தெரிதிர்;
இன்னம் ஆருளர் வீரர் மற்று; இவன்சுட எரிந்த
அன்ன மாநகர் அவிந்ததுஅக் குருதியால் அகன்று"*

இது மாற்றிவ்வழி எய்தியது என்று இவ்வாறு மாருதியால் விளைந்த இலங்கையழிவுகளைச் சரமாரியாகப் பொழியலானான். இதனோடு அவன் நின்று விட்டனனோ?

எம்பெருமானே! கரனும் வாலியுமாகிய பெரு வீரரின் வதங்களால் தேவரீர் பெற்ற வெற்றித் திறங்களை அடியேன் கேள்விப்பட்டதுண்டு. அக்கேள்வி யொன்றையே நம்பித் தேவரீரிடம் வந்து சரண் புகுந்தேன் என்று திருவுளங் கொள்ளற்க. தூதனாக வந்த இவ்வீரனால், அழிபடாத இலங்கை அடியோடு தீந்ததையும் அரக்கர் கூட்டம் பாழானதையும் நேரிற் கண்டு தெளிந்த பின்தான், தேவரீரிடம் திட நம்பிக்கை கொண்டு அடைக்கலம் புகத் துணிந்தேன் அடியேன் என்றனன் வீபீடணன். இக்கருத்தமைந்த,

"காந்தும் ஆனையிற் கரன்முதல் வீரரும் கவியின்
வேந்தும் என்றிவர் விளிந்தவா கேட்டன்று; விலங்கல்
தீந்தவா கண்டும் அரக்கரைச் செருவிடை முருக்கிப்
போந்த வாகண்டும் நானிங்குப் புகுந்தது புகழோய்!"**

என்ற கம்பர் பாடல் அறிந்து சுவைக்கத்தக்கது. இது கேட்ட பெருமானோ,

"கேள்கொள் மேலையான் கிளத்திய பொருளெலாங் கேட்டான்
வாள்கொள் நோக்கியைப் பாக்கியம் பழுத்தன்ன மயிலை
நாள்கள் சாலவும் நீங்கலின் நலங்கெ மெலிந்த

---

* பாடல் 6580. (பாடலில் பாடபேதம் உள்ளது)

** பாடல்கள் 6583.

தோள்கள் வீங்கித்தன் தூதனைப் பார்த்திவை
சொன்னான்"

யாது சொன்னான்? வீரனே! பகைவர் ஒன்று கூட்டிய படைகளையெல்லாம் பாதிக்கு மேற்படவே கொன்று விட்டாய்; இலங்கை மாநகர் முழுதையும் எரியூட்டி அழித்திட்டனை; இனி, நான் அங்கே செய்ய வேண்டிய காரியம் யாதோ? விபீடணன் கூறியவற்றைக் கேட்ட அளவில், உன் கைக்கு எட்டியளவாயிருந்தும் என் தேவியைச் சிறை மீட்டு வந்து நீ என்னிடம் சேர்த்திருந்தால், வந்த காரியம் கைகூடியிருக்குமே. அவ்வாறு செய்யாதது. என் வெறும் வில் வித்தையை உங்கட்கெல்லாம் காண்பிக்கவே போலும்! நின்புஜபல பராக்கிரமம் நிரம்பிய இலங்கையை இப்போது அணுகிவிட்டோம். இங்கே நாங்கள் செய்ய வேண்டிய வீரச் செயல்களைச் செய்து விட்டதாகவே வைத்துக் கொள்வோம். அவை யாவும் உன் செயல்கள் போலப் பெருமைக்குரியன ஆகுமோ? மகாபாஹுவே! பெரும்படையோடு புகுந்த நாம், இனி எந்த அரிய காரியத்தைச் செய்து பெரும்புகழடையப் போகிறோமோ தெரியவில்லை. என் பாக்கியமே உருவெடுத்து வந்தது போன்றவனே! எனக்கு இதுவரை அமைந்துள்ள ஆற்றலையும், பகைவனான இராவணன் வலியையும் ஒரு சேர உன்னதாக்கிக் கொண்டனை. இத்தகைய உனக்கு, மூவுலகும் படைத்த பிரமதேவனது பதந்தான் நான் அளிக்கத்தக்கது. அதனை நீ பெற்றுவிட்டாய் என்று அறிக என்பது கருத்து. மனம் இளகிக் கூறிய இவ்வருமை வசனங்களைக் கேட்டு நின்ற அநுமான், இவற்றுக்கெல்லாம் அளித்த விடையை,

"என்று கூறலும், எழுந்துஇரு நிலனுற வணங்கி
ஒன்றும் பேசலன் நாணினன் வணங்கினன் உரவோன்"

என்று பாடி, இக்கதைப் பகுதியை முடிக்கின்றார் நம் கவியரசர்.

ஆற்றல் நிறை கல்வியறிவுகளெல்லாம் திரண்டதோர் குன்றமாய் விளங்கியவன் மாருதி என்பதை இராமபிரான் அறிந்து மகிழ்ந்த இடங்கள் பல. அக்குணக் குன்றத்தை அலங்கரித்து விளங்கிய கொடுமுடியாகப் பிரகாசித்தது,

தற்புகழ்ச்சியற்ற அவனது இவ்வமைதிக் குணமேயாம். இவ்வுத்தம குணத்தை முதற்முதற் கண்டு பெருமான் வியக்க நேர்ந்த இடம் இதுவே. தன் வெற்றியை உரைப்பதற்கு நாணி மறைத்து வைத்திருந்த மாருதியின் பரம ரகசியம், பகைப்புலத்திலிருந்தபடியே யாவும் கண்கூடாகக் கண்ட தக்கோனொருவனால், எல்லாரும் அறிய வெளிப்படுத்தப்பட்டு விட்டது. புகழப் பெற்ற மாருதியைப் புகழ்வதா, அவ்விருவர் தன்மைகளையும் பாடிய கம்பரைப் புகழ்வதா என்பதே இப்போது நிகழும் கேள்வி. இதற்குத் தக்க விடையை வாசகர்களே கூறக்கடவர் என்று மு.இராகவையங்கார் கூறுவர்.*

பாரதி – கம்பன் ஒன்றொரு மானுடன்

பார் அதிரக் கவிபாடிய பாரதி, 'கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும்', 'யாம் அறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர் போல், இளங்கோவைப் போல், பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை', 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு', 'எல்லையொன்றின்மை எனும் பொருள் அதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சியைக் கருதியும், கம்பன் இசைத்த கவியெலாம் நான் காருகர் தீட்டும் உருவெலாம் நான்', 'தேவாரத்திலும், திருவாசகத்திலும், திருவாய்மொழியிலும், திருக்குறளிலும், கம்பராமாயணத்திலும் அன்பு கொள்ளாதவனுக்குத் தமிழ் அபிமானம் உண்மையிலேயே பிறக்க நியாயமில்லை' (09.06.1917) என்று பாரதி கம்பனைப் பல்வேறு நிலைகளில் புகழ்ந்துள்ளார்.

கவியோகி சுத்தானந்த பாரதியார் – நாமக்கல் கவிஞர்

வாழி ஜெயவாழி கணையாழி தருவீரன் என அனுமனை யோகி சுத்தானந்த பாரதியார் வாழ்ந்து நின்றார். நாடு முற்றும் அனுமன் வழி நாட வேண்டும் என்கிறார் நாமக்கல் கவிஞர். இந்தியாவில் இராமராஜ்யம் அப்பொழுது தான் ஏற்படும் என்பது அவர் கொள்கை. இதன் மூலம் தன் விருப்பினையும்

---

* மு.இராகவையங்கார், தெய்வப் புலவர் கம்பர், மதுரை, 1969, பக். 70–72.

அனுமன் மீதுள்ள ஈடுபாட்டினையும் புலப்படுத்துகின்றார் கவிஞர்.

புதுமைப்பித்தன்

புதுமைப்பித்தன் தன்னுடைய நாரத இராமாயணத்தில் அனுமனை நகைச்சுவைக்குரிய ஒரு பாத்திரமாகப் படைத்துள்ளார். இருப்பினும் அனுமனின் இராமபக்தியைச் சிறிதும் மாற்றாமல் அமைத்திருக்கின்றார்.

திருமுருக கிருபானந்த வாரியார்

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் 366 பக்கங்களில் இராம காவியம் தந்துள்ளார். அவரே 07.03.1954 முதல் தொடர்ந்து மதுரை ஆடி வீதியில் இராமாயண விரிவுரை தந்தார். அதனை தொகுத்து எம்.கே.ராமமூர்த்தி என்பவர் பல பிரசுரங்களாக ஜனஒலி வெளியீடு என்று தந்தார். மத மாச்சரியங்கள் இன்றி கம்பனைப் பலரும் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

எஸ்.வையாபுரிப்பிள்ளை

கம்பன் பயன்படுத்திய மூல நூல்கள் கம்பன் கண்ட தமிழுலகம், கம்பன் கண்ட தமிழ்மொழி, கம்பன் கண்ட இலக்கியம், கம்பன் கண்ட அறிவுலகு, கம்பனது கவித்துவம், கம்பனது சிற்பத் திறம், கம்பனது பாத்திர அமைப்பு ஒப்பு - நோக்கு ஆராய்ச்சி மேற்கோளோடு கூடிய நூற்பொருள் அகராதி சொல் - தொடர் முதலியவற்றின் அகராதி கம்பன் அகராதி கம்பனைக் கற்க உதவும் துணைநூல்கள் இதிகாசங்களின் இயல்புகள் இவை பற்றித் தனித்த தனி ஆராய்ச்சி நூல்கள் இயற்றப்படுதல் வேண்டும் என்பர் எஸ்.வையாபுரிப்பிள்ளை.*

அறிஞர் அண்ணா – ரா.பி.சேதுப்பிள்ளை

தமிழுக்கு கதியாக கம்பராமாயணமும், திருக்குறளும்

---

* எஸ்.வையாபுரிப்பிள்ளை, கம்பன் காவியம், சென்னை, 1962, ப. 78.

திகழ்கிறது. இவைகளைத் தொடர்ந்து நல்லோர் ஆராய வேண்டும். கம்பரசமும் * *பருக வேண்டும். கம்பர் கவியின்பமும்* ** *நுகர வேண்டும்.*

வெள்ளகால் ப.சுப்பிரமணிய முதலியார்

வெள்ளகால் ப.சுப்பிரமணிய முதலியார் எழுதிய ஆறு பாகங்களைக் கொண்ட நூல் 'கம்பராமாயண சாரம்'. அதன் முதல் தொகுதி 1936-இலும், இரண்டாம் தொகுதி 1937-இலும் மூன்றாம் ப்ாகம் 1953-இலும் வெளிவந்தது.

ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார்

ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார், கல்கியில் 1942 முதல் எழுதியவற்றை, பால, அயோத்தியா காண்டங்களை முதற் பாகமாக 1953-லும், ஆரணிய, கிஷ்கிந்தா காண்டங்களை 1954-லும் (இரண்டாம் பாகம்) சுந்தர, யுத்த காண்டங்களை 1955-லும், 'கம்பர் தரும் ராமாயணம்' என்ற பெயரில் (மூன்றாம் பாகம்) தந்தவர். கம்பர் யார்? போன்ற பல கட்டுரைகளைத் தீட்டியவர். கம்பனை இரசித்துச் சுவைத்தவர் கம்பரின் பாடல்களில் பல பாடல்களை 'மிகைப்பாடல்கள்', 'இடைச் செருகல்கள்' என்று அறிவித்தவர்.

காரைக்குடி சா. கணேசன் – ப.ஜீவானந்தம்

காரைக்குடி சா.கணேசனார், தேரெழுந்தூர் T.A.பழனியப்ப முதலியார், சேலம் கோவிந்தராஜ அய்யங்கார், வீரவிளக்கு வ.வே.சு.அய்யர், உ.வே.சா., கல்கி, பால்நாடார், ஆர்.எஸ். கந்தசாமிப்பிள்ளை, ஸ்ரீநிவாச்சாரி, ரெங்காச்சாரி, டி.எஸ்.சுந்தரம் அய்யங்கார், சீநிவாசராகவன், புதுவை அருணகிரியார், பொதுவுடைமை பேசிய வாயால், கம்பன் புகழ்

---

* அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய இரு சிறுபாகங்களைக் கொண்ட நூல் கம்பரசம்.

** சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை ஆனந்த போதினி இதழில் எழுதிய தொடர் இரு பெரும் பாகங்களாக வெளிவந்துள்ள நூல் கம்பர் கவியின்பம்.

பாடிய ப.ஜீவானந்தம், கு.அழகிரிசாமி, சிவ.சத்தியமூர்த்தி, கு.சடகோபன் இன்னும் சொல்லிக் கொண்டே செல்லலாம்.

ஒரே பாடலில் முழு இராமாயணமும்

யுத்த காண்டம், இராவணன் வதைப் படலத்தில்,

'காந்தையருக்கு அணிஅனைய சானகியார் பேர்அழகும், அவர்தம் கற்பும்
ஏந்து புயத்து இராவணனார் காதலும், அச்சூர்ப்பனகை இழந்த மூக்கும்
வேந்தர்பிரான், தயரதனார் பணியதனால் வெங்கானில் விரதம் பூண்டு
போந்ததுவும், கடைமுறையே* புரந்த ரனார்** பெருந்தவமாய்ப் போயிற்று
அம்மா***

என்று ஒரே பாடலில் இராமாயணம் முழுவதையும் சொல்லியவர் கம்பர். 10,368 பாடல்களில் (இது தவிர்த்து 1293 மிகைப் பாடல்கள் உள்ளது) 87 சந்தங்களில் 14 போர்க்களக் காட்சிகளைச் சுவைபடத் தந்தவர் கம்பர். சைவ - வைணவ பேதமின்றி சமயப் பொறையோடு கவிகள் தந்தவர் கம்பர்.

கம்பரும் முஸ்லிம்களும்

முஸ்லிம்கள் குறித்தும் கம்பர் கம்பராமாணயத்தில் பாடியுள்ளார். பாலகாண்டம், சந்திர சயிலப் படலத்தில்****

"உண் அமுதம் ஊட்டி, இளையோர் நகர் கொணர்ந்த
துண்ணெனும் முழக்கின, துருக்கர் தர வந்த"*****

என்ற பாடலில் முஸ்லிம்களால் கொண்டு வரப்பட்ட குதிரைகள் குறித்துப் பேசுகிறார்.

பாலகாண்டம், உலாவியற் படலத்தில் சீதையின் திருமணத்தின் போது மண்டபத்தில் வந்து திரண்ட மன்னர்களைக் குறிப்பிடும் போது,

---

* கடைமுறை – முடிவில்.

** புரந்தரனார் – இந்திரன்.

*** பாடல் எண் 9942.

**** வை.மு.கோபாலக்ருஷ்ணமாச்சார்யார் பதிப்பில் வரைக் காட்சிப் படலம் என்று குறிப்பிடுவார். பாலகாண்டம் வை.மு.கோ. பதிப்பு, ப.610.

***** பாடல் எண் 825.

"மானமாகதர், மச்சர், மிலேச்சர்கள்
ஏனைவீட இலாடர், விதர்ப்பர்கள்,
சீனர், தெங்கணர், செஞ்சகர், சோமகர்
சோனகேசர், துருக்கர் குருக்களே"

என்று கம்பர் முஸ்லிம்களையும் குறிப்பிடுகிறார்.*

ஏகத்துவம், சமத்துவம், சகோதரத்துவம், அறக்கோட்பாடு, அடைக்கலம் அளித்தல் போன்ற பல்வேறு நிலைகளில் இஸ்லாமியச் சிந்தனைகளோடு கம்பர் ஒத்துப் போகிறார்.

சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் – பா தாவூத்ஷா

கோட்டாற்றில் பிறந்த பாட்டாறு சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர் **'கம்பராமாயணக் கடல்'** என்று போற்றப்பட்டவர் ஆவார். கும்பகோணம் நாச்சியார் கோயிலைச் சேர்ந்த நீதிபதி பா.தாவூத்ஷா இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தனது பதவியைத் தூக்கி எறிந்தவர். கம்பராமாயணத்தில் ஆழங்கால்பட்டவர் கம்ப ராமாயண சாயபு என்று அவரைப் போற்றுவர்.

மு.மு.இஸ்மாயில்

நீதியரசர் மு.மு.இஸ்மாயில் சென்னை கம்பன் கழகத்தின் தலைவராக இருந்தவர்; கம்பன் புகழ் பாடி கன்னித் தமிழ் வளர்த்தவர். வழக்கறிஞர் ர.பா.மு.கனி, கா.நயினார் முகமது கம்பனில் ஆழங்கால் பட்டவர்கள்.

கம்பன் புகழ் பாடி கன்னித்தமிழ் வளர்த்தவர்கள், வளர்ப்பவர்கள், வளர்க்க இருப்பவர்கள், சைவ - வைணவப் போட்டிகள் பெருத்திருந்த காலத்தில் வாழ்ந்த கம்பனது சமயப் பொறையை எண்ணிப் பார்த்து சமய நல்லிணக்கம் பேண வேண்டும் என்று எண்ணிட இந்நூல் துளியேனும் உதவிடுமானால் அதுவே அடியேனுக்குப் போதுமானது.

---

* பாடல் எண் 1110.